# திராவிடநாடு

24—12—61 | வார வெளியீடு | விலை 16 காசு


# வெற்றி பெற....!

— ப. இறைநம்பி —

நாட்டுக்கே விடுதலைதான் கிடைத்து விட்டால்
நலமுடனே வாழ்ந்திடலாம் என்றார்; பெற்றுக்
கூட்டாகப் பதினான்கு வருடம் ஆச்சு;
குறைமாய வழியில்லை; வளர லாச்சு!
கேட்டாலோ கொதிக்கின்றார்; எதிர்ப்போர் தம்மைக்
கீழாகப் பேசுகிறார்; பணம்ப டைத்தோர்
ஏட்டினிலே சருக்கரையென் றெழுதி விட்டால்
ஏழைகளுக்கு, இனித்திடுமோ? சொல்வாய் தம்பி

நமக்கெனவோர் ஆட்சியிலை என்றால் ஆங்கே
நாமடிமை; இதுவுண்மை; வரியை மட்டும்
சுமக்கவென ஓரினமா? வளத்தை யெல்லாம்
சுருட்டவென ஓரினமா? இதனை மாற்றி
இமைக்குமுனம் திருவிட த்தைப் பெறுதல் வேண்டும்!
இதற்கு, '**உதய சூரியனே**' வழியைக் காட்டி
நமக்குதவி புரிந்திடுவான்; அவனை நாடி
நடந்திடுவாய் உறுதியுடன்; நமக்கே வெற்றி!

# தி. மு. க. தேர்தல் அறிக்கை

## [ தமிழ்நாடு 1962 ]

**1962-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல்களை ஒட்டிக் கொண்டு வரப்படும் இந்தத் தேர்தல் அறிக்கை, 1961 டிசம்பர் 16-ம் நாளன்று கோவையில் கூடிய தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, 1961 டிசம்பர் 17-ம் நாளன்று கோவையில் நடைபெற்ற தி. மு. க. தேர்தல் சிறப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டதாகும்.**

### கழகத்தின் குறிக்கோளும் கொள்கையும்

இனம், மொழி, பண்பாடு, வரலாறு ஆகிய அடிப்படை இலக்கணங்களாலும், உள்ளுணர்வாலும் தனி நாடாகத் திகழவேண்டிய நன்மைவாய்ந்த திராவிடம், இந்தியப் பேரரசு எனும் அரசியல் அமைப்பிலே இணைக்கப்பட்டு, முழு உரிமைகொண்ட அரசியல் வாழ்வு இழந்து, மொழிவழி அரசுகள் என்ற முறையில், தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் எனும் தனித்தனி மாநில அமைப்புகளாகவும், அதேபோது தனி அரசுத் தன்மை இழந்த நிலைக்குத் தாழ்த்தப்பட்டும் இருப்பது, திராவிட மக்களின் நல்வாழ்வுக்கும், தன்மான உணர்வுக்கும், இன இயல்புக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் ஊறு செய்வதாகும் என்பதால்; திராவிட முன்னேற்றக் கழகம், மொழிவழி தனித்தனி மாநிலங்களாக உள்ள தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கும், இனவழி திராவிடக் கூட்டாட்சி நடத்துவதே இயற்கையானது என்ற உறுதிமிக்க எண்ணத்துடன், இந்நான்கு மாநிலங்களும் இந்தியப் பேரரசுக்கு உட்பட்ட நிர்வாக அமைப்புகளாக இருக்கும் தாழ்நிலையைப் போக்கிக்கொண்டு, தனியாட்சி உரிமைபெற்றுத், தமக்குள் ஒரு சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் என்ற குறிக்கோளுக்காகக், கடந்த 12 ஆண்டுகளாக, ஜனநாயக முறையில் பணியாற்றிப்; பெருமளவு விழிப்புணர்ச்சியும் விடுதலை வேட்கையும் எழச்செய்வதில் வெற்றி கண்டிருப்பதுடன், தொடர்ந்து பணியாற்றித், திராவிடம் அமைக்க முடியும் என்ற நம்பிக்கையும், அமைத்தாக வேண்டும் என்ற உறுதியும் பெற்று, விடுதலை இயக்கமாகப் பணியாற்றி வருகிறது.

அத்துடன், அரசியலில் ஜனநாயக உரிமைப் பாதுகாப்பும், பொருளாதாரத்துறையில் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலையும், எல்லோருக்கும் நல்வாழ்வும் கிடைத்திடச் சமதர்மமும், சமுகத்துறையில் பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சியும், பேதமற்ற சமுக அமைப்பும் ஏற்படுத்துவதற்கான முறைகளை மேற்கொள்வது என்று தி. மு. கழகம் உறுதிபூண்டு, மக்கள் அதற்கான பக்குவம் பெறும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

### ஆட்சி மன்றத்தில்
### அரசியல் கட்சியாகப் பணியாற்றுதல்

திராவிடநாடு அமைத்தாகவேண்டியதற்கான எண்ணத்தையும், எழுச்சியையும் மக்களிடம் ஏற்படுத்திய திராவிட முன்னேற்றக் கழகம்—காங்கிரசுக் கட்சி, ஆட்சி மன்றங்களைக் கைப்பற்றிக்கொண்டதன் மூலம் திராவிட விடுதலை உணர்வை உருக்குலைக்கவும், அப்படிப்பட்ட விடுதலை உணர்வுக்கு இடமில்லை — தேவையில்லை — காரணமில்லை என்று உலகுக்குக் கூறவும், அரசியல் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, மக்களை மயக்கியும் மிரட்டியும், திராவிட விடுதலை உணர்வினை அழித்தொழிக்கவும் முனைந்து நிற்பதைக் கண்டதால், **மக்களிடம் தோன்றியுள்ள எழுச்சியின் மாண்பும், விடுதலை உணர்வின் தரமும் உலகுக்கு விளக்கப்படவும், விடுதலை உணர்வை அழிக்கக் காங்கிரசுக் கட்சி, ஆட்சிமன்ற முறையிலே மும்முரமாக இருப்பதால், விடுதலை உணர்வுக்கு வெற்றிகாண, அதே முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி ஆகவேண்டும் என்ற அவசியத்தாலும், தேர்தல் களம்புக முடிவு செய்து, 1957-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் கழகம் முதலில் நேரிடையாக ஈடுபட்டது.** தேர்தல் அலுவல்களிலும் முறைகளிலும் பயிற்சியும் பக்குவமும் நிரம்பப் பெற்று, பணம் படைத்தோரின் பக்கபலத்தைப் பெருமளவு பெற்றிருக்கும் காங்கிரசுக் கட்சியின் கடும் எதிர்ப்புக்குமிடையிலும், மிகுந்த வசதிக் குறைவுகளுக்கு இடையிலும், 116 இடங்களில் கழகம் போட்டியிட்டு 17 இலட்சம் வாக்குகளைப் பெறவும், 205 இடங்களில் போட்டியிட்ட காங்கிரசுக் கட்சி 50 இலட்சம் வாக்குகளைப் பெறவும், தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை (Proportional Representation) இருந்திருப்பின் கழகத்துக்கு இன்னும் அதிகப்படியான இடங்கள் கிடைக்கக்கூடும் என்று கருதவும் ஆன தன்மையில், தமிழ்நாட்டுச் சட்டமன்றத்திலும், டில்லி மக்கள் சபையிலும் முறையே 15—2 இடங்கள் பெற்று, அதுவரை விடுதலை இயக்கமாக மட்டுமே பணியாற்றிக்கொண்டு வந்த நிலையுடன், கடந்த 5 ஆண்டுகளாக, ஆட்சிமன்றங்களில் அரசியல் கட்சியாகவும் பணியாற்றி வந்திருக்கிறது.

### ஆட்சிமன்ற நுழைவால்
### கழகக் குறிக்கோளுக்கு ஏற்பட்ட வலிவு

சட்டமன்றப் பணியில் தி மு. கழகம் ஈடுபட்டதன் காரணமாகத் திராவிட விடுதலை உணர்வு குறித்துக் காங்கிரசுக் கட்சி ஏற்படுத்தி வைத்திருந்த இருட்டடைப்புப் பெருமளவுக்கு நீக்கப்பட்டதுடன், பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும், கழகக் குறிக்கோள் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு வளர்ந்ததுடன், திராவிடநாடு விடுதலைபற்றிக் காங்கிரசுக் கட்சி பரப்பியிருந்த தவறான கருத்துக்களும் குலையலாயின.

இந்தியப் பேரரசின் இணைப்பிலே மாநிலமாகத் திராவிடம் இருப்பதால் விளைந்துள்ள பொருளாதாரச் சீர்குலைவுபற்றி எடுத்துரைத்து, காங்கிரசுக் கட்சியுடன் வாதாடி, விடுதலைக் குறிக்கோளுக்கு வலிவு பெற்றிடச் சட்டமன்ற நடவடிக்கைகள் பெரிதும் உதவின.

குறிப்பாகவும் சிறப்பாகவும் பேரரசுக்கும் — மாநில அரசுக்கும் இடையே உள்ள தொடர்புகளின் தன்மை

[ 5-ம் பக்கம் பார்க்க ]

காஞ்சீபுரம்

24–12–'61.

# தம்பி!

சென்றகிழமை உன்னுடன் அளவளாவும் வாய்ப்புப் பெற்றிட இயலவில்லை; இங்கிருந்து பசியால் விரட்டப்பட்டு, மராட்டிய மண்டலம் சென்று ஆலைகளிலும் அங்காடிகளிலும், அலுவலகங்களிலும் வேலைசெய்து வாழ்நாட்களை ஓட்டிக்கொண்டுவரும், நம் உடன்பிறந்தார்களைக் காணச்சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட காட்சிகளையும், ஏற்பட்ட எண்ணங்களையும் எடுத்தெழுத ஏடு போதாது என்பது மட்டுமல்ல, எழுதத் தொடங்கினால் ஏற்படக்கூடிய [illegible]க் குமுறல்கள் உள்ளனவே, அவை என்னையும் வாட்டி வதைக்கும், படித்திட நேரிடும்போது உன் மனதை நோகச் செய்திடும். தமிழகத்தின் தாழ்நிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட, தொழில் வளமற்ற நிலையைப் பாருக்குக்காட்ட, பிழைப்புத் தேடி அலைபவர்கள், பிடி ஆட்களாகின்றவர்கள், பிறந்த நாட்டைத் துறந்தவர்கள், என்ற நிலைக்குத் தமிழ்ப்பெருங்குடி மக்கள் ஆக்கப்பட்டுப்போயுள்ளனர் என்பதை எடுத்துக்காட்ட, பல்லாயிரக்கணக்கான பாட்டாளிக் குடும்பங்கள், பாதை ஓரங்களிலே குடில்கள் அமைத்துக்கொண்டு, குப்பைக்கு நடுவே, குளிரால் கொட்டப்பட்டுக், கோலம் மாறி, திசை தவறிய மரக்கலம்போல், சிறகொடிந்த பறவைகள்போல், புழுதிபடிந்த சித்திரம்போல், நரம்பறுந்த யாழ்போல், உள்ளனர். இதைக் காணத்தானா நான்! இந்நிலையில் நம்மவர்கள் இருப்பதைக் காணவா, இப்பாழும் கண்கள்! என்று எண்ணி நெஞ்சு நெக்குருகிற்று. என் செய்வது! தங்கம் விளையும் நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்—பரணிபாடிய பரம்பரையினர்—தரணி மெச்ச வாழ்ந்தவர்கள்—இன்று ஒரு கவளம் சோற்றுக்கு வழிகாண, காடு, மலை, வனம் வனாந்திரம் கடந்து, வடபுலம் சென்று வாழ்க்கைப் பயணத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆறு அடுக்கு, எட்டு அடுக்கு மாடிகளுக்குப் பக்கத்தில், ஓலைக்கொத்துக் குடிசைகள்—தகரத்தாலான கூரைகள்—அட்டையால் அமைக்கப்பட்ட இருப்பிடங்கள் —அங்கு, சேர சோழ பாண்டிய பரம்பரையினர்!! படைபல நடாத்தி, வெற்றிபல பெற்று, வாகைசூடி வாழ்ந்தவர்களின் வழிவழி வந்தவர்கள், இன்று, செல்வம் கொழித்திடும் வடவரின் சீமையிலே, கைகட்டி வாய்பொத்திக் கடினமான வேலைகள் செய்து, உழன்று கிடக்கிறார்கள். உடலின் மினுமினுப்பையும் உறுப்புகளின் கவர்ச்சியினையும் எடுத்துக்காட்டிடும், வண்ண ஆடைகள் உடுத்திக்கொண்டு, களிநடமிடும் கண்ணினராய், புன்னகை சிந்திடும் இதழினராய், பொன்னவிர் மேனியர் அங்கு பொலிவுடன் உலா வருகின்றனர்; தலைவிரி கோலமாய்க் கிடக்கும் நம் தமிழரை, அருவருப்புடன் பார்த்த வண்ணம்.

**வேலை அதிகம்—**

**நாட்கள் குறைவு.**

ஒரு நாடு தாழ்ந்துகிடக்கிறது, ஒரு அரசு நிலை குலைந்து இருக்கிறது என்பதற்கு அந்நாட்டவர் வேற்றிடம் சென்று விம்மிக்கிடக்கும் வேதனைதரும் நிலை போதும், சான்றிளிக்க. வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்று கூறும்போது, மூக்குச் சிவந்துவிடுகிறது, இங்குள்ள அரசியல் தரகர்களுக்கு; பம்பாய், ஆமதாபாத் போன்ற இடங்களில், அமைந்துள்ள வடவரின் வணிகக் கோட்டங்களையும், தொழிலகங்களையும், ஆங்கு கூலிகளாய்க் கிடக்கும், தென்னாட்டவர்களையும் ஒருசேரக் கண்டுவிட்டால் போதும், மறுப்புரைப்போரின் மனமேகூட அனலிடை மெழுகாகும்.

ஆனால் தம்பி! அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களின் அன்புணர்ச்சியை என்னென்பேன்! கண்டதும் அவர்கள் கசிந்துருகி நிற்கிறார்கள் — கட்டித் தழுவியபடி தழதழத்த குரலிலே அண்ணா! என்று அவர்கள் என்னை அழைத்தபோது, கண்ணீரை என்னால் அடக்கிக்கொள்ள முடியவே இல்லை!! அந்த ஒரு சொல் உள்ளத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு கிளம்பிய அந்தச் சொல் — அழைப்பா? திகைப்பா? அலறலா? அழுகையா? அகமகிழ்ச்சியா? என்று என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

அண்ணா! அருந்தமிழ் நாட்டின் வீர வரலாற்றினை அடுக்கடுக்காகக் கூறுவாயே! காவிரி, தென்பெண்ணை என்றெல்லாம் கனிவுடன் பேசுவாயே! கோட்டை கட்டியோர், கொத்தளம்அமைத்தோர் என்று வீர உரையாற்றுவாயே! போரிலே புலிநிகர் மாந்தர், என்று புகழுரை பொழிவாயே! பிற பிற இடங்களிலே, மக்கள் ஆட்சிமுறை வகுக்காமுன்பே குடிக்கோனாட்சி முறையினைத் திறம்படநடத்தி, மக்களை வாழவைத்த இடம், திருஇடம் என்று தித்திப்புப் பேச்சுப் பேசுவாயே! செய் தொழில் பலப்பல! செல்வம் குறைவின்றி! என்று சிறப்பினைச் செப்புவாயே!! கார் உலாவும்! சீர் உலாவும்! எங்கும் பசுமை! எங்கணும் செல்வம்! பழமுதிர் சோலைகள்! என்றெல்லாம் நாட்டு நிலையைப் படம்பிடித்துக் காட்டுவாயே! மணிமாடங்களில் கூடங்களில் ஆடல் பாடல் மிகுந்திருக்கும்! வயலோரத்திலே அமைந்த சிற்றூர்களிலே, சின்ன இடை துவள அன்னநடை நடக்கும் செல்வியர் இருப்பர்! செங்கரும்பு செழித்திருக்கும்! வாளை துள்ளும்! மலர், மணம் பரப்பும்!—என்று மகிழ்ச்சி பொங்கிடக் கூறுவாயே!! முத்தமிழின் மாண்பினையும், மூதறிஞர் திறத்தினையும், இலக்கியச் செறிவினையும், புலவர் பெருமக்கள் புவியாளும் மன்னருக்கு, அறநெறிகூறி நல்வழிப்படுத்திய மாண்பினையும் எடுத்துரைப்பாயே! அதே நாட்டு மக்கள்தான், நாங்களும்!! ஆனால், எப்படி இருக்கிறோம் பார்த்தனையா? உழைத்து உருக்குலைந்து கிடக்கிறோம்.என்னென்ன வேலைகளிலே ஈடுபட்டுக் கிடக்கிறோம், கண்டனையா? கடினமான வேலைகள்! கேவலம் என்று மற்றவர் கருதிடும் வேலைகள்! இவைகளிலே ஈடுபட்டிருக்கிறோம்!! இதைக் காண்கின்றனையே, உன் மனமென்ன கல்லா இரும்பா? உடன்பிறந்தான் என்கிறாயே, உள்ளம் உருகாமலா இருக்கிறது? எமது நிலையைப் பார்த்தனையே, துக்கம் உன் நெஞ்சைத் துளைத்திடவில்லையா? என்ன சொல்கிறாய்? என்ன எண்ணுகிறாய்? எமது கதி இதுபோலாகக் காரணம் என்ன? இங்குள்ள வடவரும் சிலர் திருவிடம் வந்து தங்கியுள்ளனர்; ஆனால், எதற்கு? எம்மைப்போல் கல் உடைக்கவா? கட்டை வெட்டவா? குப்பை கூட்டவா? கொத்தடிமை வேலை செய்யவா? இல்லையே! 'முதலாளி' வேலைபார்க்க அல்லவா வடவர், திருவிடம் வந்துள்ளனர்!! ஆனால், நாங்கள்? பார்க்கிறீர்களே கண்ணால். விளக்கவா வேண்டும்? இந்த வேதனை தீர வழியே இல்லையா? எமது நிலையை மாற்றி அமைக்க மனமே இல்லையா? இழிநிலையிலிருந்து விடுபடப் போவதேயில்லையா?—என்றெல்லாம், அந்த ஒரு சொல் —அண்ணா! என்ற அந்தக் கனிவு நிரம்பிய மொழி, என்னைக் கேட்டுக்கேட்டு வாட்டி வதைத்தது, தம்பி! வாட்டி வதைத்தது.

என்னை நானே நொந்துகொண்டேன். ஏதும் செய்ய இயலா நிலையில் இருக்கிறோமே—எதையும் உணர, உருக, உரைத்திட முடிகிறது—ஆனால், மாற்றி அமைத்திட, திருத்தம் கண்டிட, முடியவில்லையே! பிடி வேறோர் சார்பினரிடமல்லவா சிக்கிக்கொண்டிருக்கிறது, நாமோ, அறிந்ததை உரைத்திட மட்டுமன்றோ வாய்ப்புப் பெற்ற நிலையிலே உள்ளோம்!–என்றெண்ணி மெத்தவும் வாடினேன். காய்ந்த பயிரையும், காரற்ற வானத்தையும், நீரற்ற வாவியையும் காணும் உழவன் மனம் என்ன பாடுபடும்? என் மனம், அந்நிலை!!

என் மன நிலையை உணர்ந்துகொண்ட அந்த மாண்புமிக்கவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா, தம்பி! என் வாட்டத்தைப் போக்க, அன்பினை வாரி வாரி வழங்கினர். வறுமை நிலைமை! ஆனால், அகமும் முகமும் மலர்ந்த நிலையில், என்னிடம் அளவளாவினர்! அவர்கள் காட்டிய பேரார்வம், என்னை வெட்கமடையச் செய்தது.

பட்ட துயரம் போதும், பண்பாடிட வாரீர்!

பட்டொளி வீசிப் பறக்கிறது தாயின் மணிக்கொடி, பாடுபடுவோரே, கவலை விடுமின்!

காடுமேடு சுற்றியது போதும், தாயகம் அழைக்கிறது வாரீர்!

பிழைக்க நெடுந்தூரம் வந்தவர்களே! இனி வாழ வழி அமைந்துவிட்டது, வாட்டம் துடைத்திடத் தாயகம் அழைக்கிறது வாரீர்!

( 14-ம் பக்கம் பார்க்க )

2-ம் பக்கத் தொடர்ச்சி

விளைவுபற்றி மக்கள் உணர்ந்து திராவிடம் தனிஅரசு ஆவதன் மூலமே, பொருளாதாரச் சீரமைப்பு என்பது பற்றி அறிந்துகொள்ள, சட்டமன்ற நடவடிக்கைகள் துணைபுரிந்தன.

## ஆட்சி மன்றப் பணியால் ஏற்பட்ட பலன்கள்

மாநில அமைச்சர்களின் கரங்கள் கட்டப்பட்டுள்ள நிலைமையும், தொழில் வளர்ச்சி வடபுலத்திலேயே மிகுதியும் ஏற்பட்டு வருவதைத் தடுக்கும் அதிகாரம் இல்லாதிருக்கும் அவல நிலையும், நிலைமை — தேவை ஆகியவற்றுக்குப் போதுமானதாகக்கூட அதிகாரம் அமைச்சர்களிடம் இல்லாதிருக்கும் நிலையும், எதற்கும் பேரரசின் தயவை நாடியே தீரவேண்டிய தாழ்நிலையில் மாநில அமைச்சர்கள் தள்ளப்பட்டிருப்பதையும், மக்கள் உணரத்தக்க நிலையை தி. மு. கழகம் சட்டமன்ற நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திற்று.

திராவிடநாடு விடுதலை எனும் குறிக்கோளை 'விளைவு சக்தி, பிரிவினைக் கூச்சல்' என்றெல்லாம் காங்கிரசு ஆட்சியாளர் திரித்துக்கூற முற்பட்டனர்; என்றாலும், தி. மு. கழகச் சட்டமன்ற நடவடிக்கைகளை எடுத்துக் காட்டி வாதாடியும், எச்சரித்தும், பேரரசிடமிருந்து வசதிகளை மாநிலத்துக்குப் பெற்றளிக்க மாநில அரசுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற நடவடிக்கை ஏற்படுத்திய புதிய அரசியல் சூழ்நிலை காரணமாகத், திராவிடத்தைத் திருப்திபடுத்தித் தீரவேண்டும் என்ற அவசியத்துக்குப் பேரரசு இழுத்துவரப்பட்டதுடன், பொருளாதாரத் தொழில் வளர்ச்சிகள் ஒரே இடத்தில் குவிதல் கூடாது—பிரதேச வளர்ச்சியில் ஒரு சமநிலை ஏற்பட்டாக வேண்டும் என்ற தத்துவத்துக்கு உரம் ஏற்பட்டு, அதன்படி காரியமாற்றுவதாகப் பேரரசு வாக்களிக்கும் நிலைமையும் உருவெடுத்தது,

இந்தியப் பேரரசு ஆதிக்கத்துக்கான கருவியாக இந்தி மொழியைப் பயன்படுத்துவதில் காட்டிவந்த பிடிவாதம் தளர்ந்திடவும், எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இந்தியையே ஆட்சி மொழி ஆக்கிவிடுவது என்ற அரசியல் சட்டவிதியே செயலற்றதாகத்தக்க நிலைமையும், தி. மு. கழக சட்டமன்ற, பாராளுமன்ற நடவடிக்கைகளால் ஏற்பட்டதை நாடு அறிந்து போற்றத் தலைப்பட்டது.

தி மு. கழகம் சட்டமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் பலனுகத், 'திராவிட நாடு' என்பது அலட்சியப் படுத்தப்பட வேண்டியவர்களின் கூக்குரல்' என்ற இறுமாப்புப் போக்கு முறிந்ததுடன், இன்றைய அரசியலில் மிக அவசரமாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினை என்று, குறிக்கோளின் முக்கியத்துவம் ஒப்புக்கொள்ளப் படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிமன்றங்களில் அரசியல் கட்சியாகப் பணியாற்றியது, விடுதலை இயக்கம் என்ற தன்மைக்கு வலிவும் பொலிவும் அளித்தது.

## ஆட்சி மன்றத்தின் மூலம் ஆற்றிய ஜன நாயகக் கடமைகள்

திராவிட முன்னேற்றக் கழகம், இத்தகு பலன்களை மட்டும் பெற்றுவிட்டால்போதும் என்று இருந்துவிடவில்லை.

ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சியாகப் பணியாற்றி நிறைவேற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையையும் செம்மையாகச் செய்துவந்திருக்கிறது.

புரட்சிகரமானது என்று பலராலும், ஆபத்தானது என்று ஆதிக்கக்காரர்களாலும் கருதப்பட்டுவரும் திராவிட நாடு இலட்சியத்தை அடிப்படைக் குறிக்கோளாகக் கழகம் கொண்டிருப்பினும், அது நிதானம் இழக்காமல், நெறி பிறழாமல், ஜனநாயகப் பண்பாட்டுக்கு ஊறு தேடாமல், ஒழுங்கு கெடாமல் தனது சட்டமன்ற நடவடிக்கைகளை மேறகொண்டு, ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகப் பணியாற்றி வந்திருக்கிறது.

வேறு இடங்களில் எதிர்க்கட்சிகளாக உள்ளவைகள் எரிச்சலூட்டும் முறைகளில் ஈடுபட்டும், குழப்ப நிலைமைகளை மூட்டிவிட்டும், ஜனநாயக மாண்பு மங்கும்படி செய்தது போலன்றி, தி. மு. கழகம் பிரச்சினைகளை ஆராய்வதிலும், வாதிடுவதிலும், ஆட்சியாளர்களை நல்வழிப்படுத்த முயலுவதிலும், தீதானவைகளை மேற்கொள்ளும்போது தடுத்து நிறுத்துவதிலும் பொறுப்பு மிக்க பணியாற்றி,ஜனநாயகவாதிகளின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது.

## அரசின் ஆக்கவேலைகளுக்கு ஆதரவு

பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாகப் பணியாற்றி வரும் நிலைமையில் அரசாங்கம் மேற்கொள்ளும் ஆக்க வேலைகளுக்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும் கழகம் தனது நல்லாதரவை நல்கி வந்திருக்கிறது என்பதுடன், இந்தியாவின் வட எல்லையின் சில பகுதிகளில் செஞ்சீன புகுந்து ஆக்கிரமிப்புச் செய்திருப்பதைக் கண்டித்தும், போர்த்துக்கீசிய ஆதிக்கத்தின்கீழ் அவதிப்படும் கோவாப் பகுதியை விடுவிக்க வேண்டுமெனவும், இந்தப் பிரச்சினைகளில் அரசாங்கம் மேற்கொள்ளும் தக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு காட்டியும், தீவிரமாகவும் திறம்படவும் அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்றும் கழகம் வலியுறுத்தி வந்துள்ளது.

கூச்சல், குழப்பம், கலாம் விளைத்தல், போன்ற காட்டு முறைகள் தலைகாட்டாதவண்ணம் கட்டுப்பாடாகவும், கண்ணியமாகவும், கடமையைக் கழகம் நிறைவேற்றி வந்திருக்கிறது.

## மக்களின் உரிமைகள், நலன்கள் கருதி ஆற்றிய பணிகள்

எண்ணிக்கை பலத்தால் எதையும் செய்யலாம் என்ற போக்கில் காங்கிரசுக் கட்சி காரியமாற்ற முனைந்த போதெல்லாம், பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், நலன்களைப் பேணவும் திராவிட முன்னேற்றக் கழகம் தவருது பணியாற்றி வந்திருக்கிறது.

தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடையத்தக்க சீரிய யோசனைகளைக் கூறிவந்ததுடன், ஏதேச்சாதிகாரப் போக்குத் தலைதூக்கும் நேரத்திலெல்லாம் தடுத்துவந்திருக்கிறது.

பொதுமக்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமலும், வரிவிதிப்பு, கொடுமையான வடிவம் எடுத்து மக்களை வாட்டாமலும் இருப்பதற்கான செயல்களில் விழிப்புடன் இருந்து ஈடுபட்டு வந்திருக்கிறது.

கொள்கை இழப்பும், பதவி தேடலும், சலுகைகள் நாடலும் அரசியல் கட்சிகளிடை பெரும்பிணியெனப் பரவியுள்ள இந்நாட்களில், திராவிட முன்னேற்றக் கழகம் அச்சம், தயை தாட்சன்யத்துக்காகக் கொள்கை இழக்கும் கோணல் வழி செல்லாமல், விடுதலை இயக்கம் எனும் இலக்கணத்தைப் பாழ்படுத்திக்கொள்ளாமல், ஆட்சிமன்றத்தில் உள்ள அரசியல் கட்சி மேற்கொள்ள வேண்டிய ஜனநாயகக் கடமைகளையும் நிறைவேற்றி, மீண்டும்

பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கான தகுதியையும் உரிமையையும் பெற்றிருக்கிறது.

தி. மு. கழகம் ஆட்சிமன்ற நடவடிக்கைகளின்போது மறவாமல், பிற்போக்குத்தனத்தை எதிர்த்து வந்திருக்கிறது என்பதும், தீவிரமான திட்டங்களுக்காக வாதாடி வந்திருக்கிறது என்பதும் நாடறிந்த உண்மையாகும்.

சமதர்மத்தை ஏட்டளவில் வைத்துக்கொண்டு, செயலில் செல்வவான்கள் பக்கம் சாயும் போக்கிலே காங்கிரசு நடந்துகொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தி.மு.கழகம் ஏழை எளியோருக்காக, உண்மைச் சமதர்ம வெற்றிக்காக வாதாடி இருக்கிறது.

அநீதிகளைக் கண்டிப்பதில், தி. மு. கழகம் அஞ்சியதில்லை.

நிர்வாகத்தில் தரம், திறம் ஓங்கவேண்டும் — ஊழல் நெளியக்கூடாது என்பதில் தி. மு. கழகம் தனிக் கவனம் செலுத்திவந்திருப்பதைச் சட்டமன்ற விவாதங்களே நன்கு விளக்கும்.

உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் உரிமைகளுக்காகத் தி. மு. கழகம், ஆர்வத்துடன் பணி புரிந்திருக்கிறது.

பொதுமக்களை பெருவாக வாட்டிவரும் விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்த வண்ணம் இருந்ததன் விளைவாக, காங்கிரசு ஆட்சியே நிலைமையின் சீர்கேட்டினை மறைக்க முடியாதபடி செய்து, தமது இயலாமையை ஒப்புக்கொண்டு தீரவேண்டிய நிலைமைக்குக் காங்கிரசுக் கட்சி வரவேண்டியதாயிற்று.

வரி பளுவானதாகி விட்டதையும், நடுத்தர வகுப்பினரையும் ஏழை எளியோரையும் மிகவும் அழுத்துவதையும் எடுத்து விளக்கி எச்சரித்து, காங்கிரசாட்சி மேற்கொண்டும் வரிகள் போட்டு மக்களை வாட்டாதபடி தி. மு. கழகம் பார்த்துக்கொண்டது.

ஒவ்வொரு பிரச்சினையையும் சமதர்மக் கண்கொண்டு நோக்கிக் கடமையாற்றி வந்திருக்கிறது.

உரிமையை மதித்து, சமத்துவத்தையும் சமதர்மத்தையும் போற்றிப் பணியாற்றும் ஓர் ஜனநாயகக் கட்சியாக தி. மு. கழகம் சட்டமன்றத்தில் இயங்கி வந்திருக்கிறது என்பதை ஐந்தாண்டுக்கால சட்டமன்ற நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

## ஆட்சிமன்றத்தில் ஐந்தாண்டுக் காலத்தில் ஆற்றிய முக்கிய பணிகள்

### 1. உணவுப்பொருள் விலை ஏற்றத் தடுப்பு

மக்கள் உண்ணும் உணவுப் பொருள்களின் அபரிமிதமான விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்த இந்த ஆட்சியால் முடியவில்லை. இந்தப் போக்கினால் திண்டாடும் ஏழை மக்களின் அவலத்தை அவ்வப்போது எடுத்துக் காட்டி, குறைவான விலையில் கூடுமானவரை உணவுப் பொருள்கள் கிடைக்கும்வகையில் நியாயவிலைக் கடைகளைத் திறக்குமாறு அரசாங்கத்தைத் தூண்டியிருக்கிறது.

### 2. வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பு

கல்வி நன்கு கற்றவரும், தேர்ச்சிபெற்ற தொழிலாளரும் வேலையின்றித் திண்டாடுவதையும், அன்றாடம் கூலிபெறும் ஏழைத் தொழிலாளிகள் போதிய வேலை வாய்ப்பின்றித் தவிப்பதையும் எடுத்துச்சொல்லி, புதிய தொழில்கள், போதிய வேலை வாய்ப்புகள் ஏற்பட வழிவகை செய்துள்ளது.

### 3. விலைவாசி ஏற்றம், பணவீக்கம் தடுப்பு

சராசரி வருமானக் குறைவும், வாழ்க்கைத் தேவைப் பெருக்கமும் சமன்படுத்தப்பட்டு, விலைவாசி ஏற்றம் தடுத்து நிறுத்தப்பட்டு, பணவீக்கம் ஏற்படாதிருக்க வழி கோலுமாறு ஆட்சியாளரை வற்புறுத்திவந்திருக்கிறது.

### 4. உணவுப்பொருள் வரிக் குறைப்பு

மறைமுக வரிகளால் பெருமளவு பாதிக்கப்படும் ஏழைகளின் அல்லலை எடுத்துக்காட்டிவந்ததுடன்; உணவுப் பொருள்களின்பேரில் விதிக்கப்பட்டுவந்த வரியை மூன்றில் ஒரு பங்கு குறைப்பதற்குப் பாடுபட்டிருக்கிறது. அழுகும் பொருள்களின்மீது அரசாங்கம் விதித்த அநியாய வரியையும், கழகம், அரசியல் மன்றத்தில் எதிர்த்துப் போராடி வரியைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது

### 5. ஏழை விவசாயிகளுக்கு வருமானவரிக் குறைப்பு

விவசாய வருமானத்தின்பேரில் ஓட்டு மொத்தமாக விதிக்க முன்வந்த வரியை குறைந்த அளவு நிலம்படைத்தவர்கள் பேரிலும் திணிக்கவேண்டாம் என்று சொல்லித் தடுப்பதற்குப் பாடுபட்டிருக்கிறது,

### 6. நில உச்சவரம்பு அநீதி கண்டிப்பு

குறைபாடுகள் நிரம்பிய முறையில் காங்கிரசு ஆட்சியாளரால் தயாரிக்கப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தின் அநீதிகளையும், கேடுகளையும் எடுத்துச் சொல்லி, மக்கள் அணியையும் திரட்டிக்காட்டி, ஆட்சியாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது,

### 7. உழவர்களுக்கு வசதி கிடைக்க வழி

உழவர்களுக்குத் தேவையான நீரிறைப்பு மின்சாரச் சாதனம், டீசல் எண்ணெய், உரம், விதை, உழவுக் கருவிகள் குறைந்த விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி செய்ய வேண்டுமென வற்புறுத்தி வந்திருக்கிறது.

### 8. கைத்தறியாளர்களுக்குச் சலுகைகள்

கைத்தறி வளர்ச்சியிலும், விற்பனையிலும் கழகம் கொண்டுள்ள அக்கறை மக்கள் அறிந்ததே. ஆட்சிமன்றத்திலும் அதுகுறித்து நேரங் கிடைத்தபோதெல்லாம் வாதாடிக் கைத்தறி வளர்ச்சிக்கும்—விற்பனைக்கும் தேவையான சலுகைகள் கிடைக்க வகைசெய்திருக்கிறது. அதேபோல், கைத்தறி நெசவாளர் துயர்துடைக்கப் பல திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருமாறு ஆட்சியாளரை வற்புறுத்தியிருக்கிறது,

### 9. தொழிலாளர் போராட்டங்களுக்குத் துணைநிற்றல்

எல்லாத்துறைத் தொழிலாளர்களின் குறைபாடுகளையும், நிவாரணத்தையும் தொழிலாளர் பெருமக்களின் சார்பாகக் கழகம் சட்டமன்றத்தில் வாதாடி, பல முற்போக்கான திட்டங்களைச் செயலில் கொண்டுவர உறுதுணை புரிந்திருக்கிறது. தொழிலாளர்களின் நியாயமான அறப்போராட்டங்களின் நியாயத்தையும், உடனடியாக அவைகளுக்குப் பரிகாரம் காணவேண்டிய அவசியத்தையும் அது எடுத்துச் சொல்லத் தவறியதில்லை.

### 10. மீனவ மக்களுக்கு வசதி

மீனவமக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவதும், அவர்கள் வாழ்வு வளம்பெறும் வகைசெய்வதுமான நவீன மீன்பிடிக் கருவிகளும், மற்றும் இதர சாதனங்களும் உரிய வகையில் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென வற்புறுத்தி வந்திருப்பதுடன், அந்தச் சமுதாயம் முன்னேறுவதற்குரிய பல வழிமுறைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

### 11. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம்

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் முன்னேற, உரிய தொழிற்சாதனங்களும், கல்வி, அறிவு, மருத்துவ வசதி,

வீட்டு வசதி போன்றவையும் குறைவறக் கிடைப்பதற்கு அரசிடம் போராடிவந்திருக்கிறது. குறிப்பாகத் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதில் கழகம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், பிரச்சாரமும், அரசாங்கத்தை விழிப்புணர்வுபெறச் செய்திருக்கின்றன. சாதிக் கொடுமை ஒழியும் வகையில் கலப்புமணம் புரிந்துகொண்டவர்களுக்கு உத்தியோகச் சலுகை உட்பட எல்லாச் சலுகைகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவேண்டுமென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டப்படும் வீடுகள் ஊரின் நடுவே மற்றவருடன் கலந்து வாழும் வகையில் அமையவேண்டும் எனவும் வற்புறுத்தி வந்துள்ளது.

**12. மரமேறும் தொழிலாளர் நலம்**

வேலையிழந்து நிற்கும் மரமேறும் தொழிலாளர்களுக்கு வேறு தொழில் நடத்த தாராள உதவிபுரிவதுடன், பதனீர் இறக்குவோர் தாராளமாக அனுமதி பெறவும் வழி செய்யவேண்டுமென ஆட்சியாளரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

**13. சீர்திருத்தத் திருமணச் சட்டம்**

சீர்திருத்தத் திருமணத்தைச் சட்டப்படி (செல்லத்தக்கதாக) ஏற்கவேண்டுமெனவும், திருமணங்கள் அனைத்தையும் பதிவு செய்ய வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

**14. அரசாங்க ஊழியர்களின் நிலை உயர**

அரசாங்க ஊழியர்களின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி நிவாரணம் அளிக்க வேண்டுமென அரசாங்கத்திடம் போராடியிருக்கிறது. ஊதியக்குழு சிபாரிசுகளில் உள்ள குறை நிறைகளை எடுத்துக்கூறி, ஆவனசெய்ய வேண்டியும் அது தொடர்ந்து ஆட்சியாளரை வற்புறுத்தி வந்திருக்கிறது.

**15. ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வாழ்க்கைத்தரம் உயர**

அதேபோல் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கும் அரசாங்கத்திடம் பலமுறை வாதாடிப் போராடி, பல வெற்றிகளை ஈட்டியிருக்கிறது.

**16. பகலுணவு, சீருடைத் திட்டம்**

பள்ளிச்சிறுர்களுக்குப் பகலுணவு, படிக்கும் சூழ்நிலைச் சீரமைப்பு, சீருடைத்திட்டம் ஆகியவைகளில் கழகம் கவனஞ்செலுத்திப் பல திட்டங்கள் நிறைவேறப் பாடுபட்டிருக்கிறது.

**17. தொழில்களைத் தேசியமயமாக்குதல்**

தனிப்பட்ட மனிதர்களுக்குக் கோடிக்கணக்கில் இலாபம் அளிக்கும் பஸ் போக்குவரத்துத் தொழில், சினிமாக் கொட்டகை போன்ற தொழில்களை அரசாங்க உடைமை ஆக்குமாறு வற்புறுத்தி வந்திருக்கிறது.

**18. எதிர்க்கட்சிகளின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம்**

ஜனநாயகப் பண்பு அரசியல் மன்றத்தில் மிகப் பரவலாக நிலவும் வகைசெய்ததுடன், ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சிகளாயுள்ள கட்சிகளின் எண்ணங்களை—திட்டங்களை முக்கியத்துவம் கொடுத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தியிருக்கிறது.

**19. தமிழ் ஆட்சிமொழியாகச் செயல்படுதல்**

இந்த மாநிலத்தில் தமிழே ஆட்சிமொழியெனச் சொல்லியபின்பு, நீதிமன்றம், நிர்வாகத்தின் மேல்மட்ட இடங்களில் அதனைச் செயல்படுத்தாதிருப்பதைக் கண்டித்துத் தமிழின் உயர்வுக்காகப் போராடியிருக்கிறது.

**20. 'தமிழ்நாடு' 'திரு' 'திருமதி' சொற்களை வழங்குதல்**

தமிழ்நாட்டைத் 'தமிழ்நாடு' எனச் சொல்லத் தைரியமற்றுக்கிடக்கும் ஆட்சியாளரைத் தட்டிக்கேட்டு வாதாடியிருக்கிறது. அதேபோல், 'திரு' 'திருமதி' போன்ற அழகு தமிழ்ச் சொற்கள் அரசியல்துறைக் குறிப்புக்களிலும், உள்ளாட்சிமன்ற நிர்வாகங்களிலும், வணிகத்துறையிலும் வரவேண்டுமெனப் பாடுபட்டு வெற்றிபெற்றுள்ளது.

**21. கட்டாய இந்திப் பாடத் திட்டத்திற்கு எதிர்ப்பு**

பள்ளி மாணவர்களுக்கு விருப்ப பாடம் எனும் பெயரில் கட்டாயமாக நுழைக்கப்படும் இந்தியை எதிர்த்துக் கண்காணித்திருக்கிறது.

**22. ஆங்கிலமொழி நீடிப்புக்கு ஆதரவும், இந்திமொழித் திணிப்பிற்கு எதிர்ப்பும்**

1965-ஆம் ஆண்டுக்குப் பிறகும் காலவரையின்றி, அகில உலக மொழியான ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதற்கு மத்திய அரசு இணங்குமாறு செய்ய மாநில அரசை வற்புறுத்தியிருக்கிறது. இந்த நாட்டு மக்கள், இந்தித் திணிப்பினைக் குறித்து எவ்வளவு கொதிப்படைகின்றனர் என்பதைப் பாராளுமன்றத்திலும் எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்திருக்கிறது.

அரசாங்க நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் நுழைக்கப்பட்டு வரும் இந்தித் திணிப்பினைக் கண்டித்துப் பல வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. தமிழைத் தாழ்த்தும் தேவநாகிரி வரிவடிவத் திணிப்பு எண்ணத்தைக்கண்டித்துத் தடுத்துநிறுத்தப் பாடுபட்டிருக்கிறது.

உத்தியோக நியமனங்களில் இந்தியில் பெறப்படும் மதிப்பீட்டெண்கள்தான், அதிக முக்கியத்துவம் பெற்றிருந்த நிலையை அவ்வப்போது எதிர்த்துப் போராடி எச்சரிக்கை செய்திருக்கிறது.

**23. கவர்னர் பதவிக்கு எதிர்ப்பு**

மக்கள் வரிப்பணத்தில் ஆண்டுதோறும் பல இலட்சம் ரூபாயைப் பாழாக்கிவரும் கவர்னர் பதவி தேவையில்லை எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருப்பதுடன், அதன் காரணமாக கவர்னர் சம்பந்தப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுங்கியே செயல்பட்டு வந்திருக்கிறது.

**24. உதகைச் சட்டமன்ற வீண்செலவுக்கு எதிர்ப்பு**

மக்கள் வரிப்பணத்தை வீணுக்கி உதகையில் கூட்டிய சட்டமன்றக் கூட்ட நிகழ்ச்சியைத் துவக்கத்திலேயே கழகம் கண்டித்தது. ஆட்சியாளரின் டாம்பீகப் போக்கினை மக்களுக்குத் தெளிவாக விளக்கிச் சொல்லிற்று. அடுத்த ஆண்டிலேயே அந்த வீண் செலவு கைவிடப்பட்டு மக்கள் வரிப்பணம் பாழாவது தவிர்க்கப்பட்டது.

**25. கிராமங்களில் வசதிகள்**

கிராமங்களில் குடிதண்ணீர், மருத்துவமனை, சாலை வசதி, பள்ளிக்கூடம் ஆகியவை குறைவற அமைக்கப்படவேண்டும் என வற்புறுத்தி வந்திருக்கிறது.

**26. ஊராட்சிமன்றங்களின் அதிகார உயர்வு**

ஊராட்சிமன்றங்களின் அதிகாரம் உயர்த்தப்பட்டு, வருமானம் பெருகவேண்டுமென வற்புறுத்தி, பஞ்சாயத்துக்களின் சட்டத்திற்குப் பல திருத்தங்களைக்கொடுத்து செயல்படுத்துமாறு வற்புறுத்தியிருக்கிறது.

**27. சென்னை மாநகராட்சிமன்றம்**

சென்னை மாநகராட்சிமன்றம் பல்லாண்டுக் காலமாகக் காங்கிரசுக் கட்சி நிர்வாகத்தில் இருந்தபோது,

உள்ளாக்கப்பட்ட கேடுபாடுகளிலிருந்து நீக்கிப் புதிய வரி விதிக்காமலே வருவாயைப் பெருக்கியும், ஏழைகளைப் பாதிக்கும் சில வரிகளைக் குறைத்தும், முன்னர் அமைத்த வரவு-செலவுத் திட்டத்தொகையை ஈடுகட்டியும், கழகம், கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. இந்தச் சீரிய நிர்வாகத்திற்கு ஒத்துழைப்புத்தர முன்வராத—கட்சி வெறிகொண்ட ஆட்சியின் போக்கினைக் கண்டித்து எச்சரித்துள்ளது.

**28. சென்னை மாநகரத்துக்கு வசதிகள்**

சென்னை மாநகரத்து நெடுஞ்சாலைகளைச் சீரமைக்கத் தேவையான முழுத் தொகையும், அரசு திரட்டும் மோட்டார் வரியிலிருந்து அளிக்கப்படவேண்டுமெனவும், பல ஆண்டுகட்கு முன்னர் அமைக்கப்பட்டதும், இப்போது போதியவையாக இல்லாமலும் உள்ள குடிநீர்க் குழாய்கள், வடிகால், கழிவுநீர்க்கால்கள் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும் முழுத் தொகையை உதவியாக அளிக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

**29. நடைபாதை வாசிகளுக்கு வீட்டு வசதிகள்**

மாநகரிலும், பிறநகர்களிலும் உள்ள வீடற்ற—நடைபாதை வாசிகளுக்கு வீட்டு வசதி செய்துதர வற்புறுத்தி இருக்கிறது.

**30. குடிசை வாழ்வோருக்கு வசதிகள்**

ஏழை மக்கள் குடிசைகளைப் பிய்த்தெறிந்தும், தொல்லைக்குள்ளாகியும், சேரிச் சீர்திருத்தம் என்ற பேரால் ஆட்சியாளர் செய்யும் அநீதியைக் கண்டித்து, குடிசைவாழ்வோருக்கு நிரந்தரப் பரிகாரம் தேடவேண்டுமென வற்புறுத்தி வந்திருக்கிறது.

**31. அரசாங்க நிர்வாக ஊழலுக்கு எதிர்ப்பு**

பொதுமக்களின் விண்ணப்பங்களைக் கவனிப்பதில் அரசாங்க நிர்வாகம் மிகுந்த காலதாமதம் காட்டுவதையும், பல இலாக்காக்களில் ஊழல் மிகுந்தும் மலிந்தும் காணப்படுவதையும், ஆளுங்கட்சியினர் தமது ஆதிக்கத்திற்கான வகையிலேயே போலீசு நிர்வாகத்தை ஆட்டிப் படைத்து வருவதையும் கழகம் பலமுறை கண்டித்துள்ளது.

**32. இலங்கைத் திராவிடர் நிலை**

இலங்கைத் திராவிடர்களின் துயரமும்—அடக்குமுறைச் சட்டங்கள் பலவற்றிற்கு அவர்கள் ஆளாகியுள்ளதையும்—அவர்கள் உரிமை பறிக்கப்படுவதையும்—அவர்கள் விரட்டப்படுவதையும் சுட்டிக்காட்டி, அவர்களுக்குத் தகுந்த நியாயம் கிடைக்க வழிகாணுமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்க மாநில ஆட்சியை வற்புறுத்தியுள்ளது.

**33. தாயகம் திரும்பியவர்க்கு வாழ்க்கை வசதிகள்**

வெளிநாட்டிலிருந்து தாயகம் வந்துவிட்ட மக்களுக்குத் தாயகத்தில் வாழ்வைத் துவங்கும் வகையில் தொழிற்சாலைகள் அமைக்கவோ, வாணிபம் நடத்தவோ போதிய தொகையைக் கடனாக அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

**34 வெளிநாட்டில் வாழும் திராவிடர்களின் அவதி துடைக்க வற்புறுத்தல்**

தென்னாப்பிரிக்காவில் காட்டப்படும் நிறபேதத்தாலும், பர்மாவில் பணம் அனுப்பத் தடை செய்திருக்கும் போக்காலும் திராவிடர்கள் படும் அவதியைத் துடைக்க வழிகாணுமாறு கேட்டுள்ளது.

**35. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 1,000 கோடி திட்டத்திற்கு வற்புறுத்தல்**

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் திராவிடம்—குறிப்பாகத் தமிழகம், நியாயமாகக் கிடைக்கவேண்டிய பங்குத் தொகையைப் பெறவில்லை. அதன் விளைவாகத் தொழில் வளர்ச்சி குறைந்ததுடன், வருமான வளர்ச்சிக் குறைவும் ஏற்பட்டுள்ளது. இந்த அநீதியைப் போக்கி, ஈடு செய்யும் வகையில் பதினெராயிரம் கோடி ரூபாய் அளவுள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழகத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு ஒதுக்குதல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.

**36. புதிய இரயில் பாதைகளுக்கு வற்புறுத்தல்**

கடந்த இரு திட்டங்களிலும் இரயில்பாதை அமைப்பில் திராவிடம் முற்றும் புறக்கணிக்கப்பட்டுள்ள கொடுமையைக் கூறி, மூன்றும் திட்டத்திலாகிலும் அதனை ஈடு செய்யுமாறு வற்புறுத்த வேண்டுமென எச்சரித்துள்ளது. மானாமதுரை—விருதுநகர், சேலம்—பெங்களூர், விழுப்புரம்—தாம்பரம், சத்தியமங்கலம்—சாம்ராஜநகர் ஆகியவைகளுடன், நெல்லை—குமரி, திண்டுக்கல்—கடலூர், சின்னசேலம்—செங்கற்பட்டு, சென்னை—அரக்கோணம் மின்சாரப் பாதையையும் தமிழகத்தில் போடச் செய்யுமாறு கேட்டுள்ளது.

உறுதி செய்யப்படாத இந்தத் திட்டங்களையும் மூன்றும் திட்டத்தில் எடுத்து நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்தியுள்ளது.

முதன்முறையாக, குறைந்த எண்ணிக்கையுடன் சட்டமன்றம் சென்ற தி. மு. கழகம், முற்போக்கான கருத்துடன் பொறுப்புள்ள ஒரு எதிர்க்கட்சியாகப் பணியாற்றி, பொதுமக்களின் பாதுகாவலனாகத் திகழும் தகுதி பெற்றிருக்கிறது.

எண்ணிக்கை பலமற்ற நிலையில் தி. மு. கழகம் எடுத்துரைத்த யோசனைகளும், திட்டங்களும் நாட்டுக்குத் தேவையானது என்பதையோ, பொதுமக்களின் நலனுக்கு உகந்தவை என்பதையோ எவரும் மறுத்திட இயலாது.

## காங்கிரசாட்சியில்...

முற்போக்கான இந்தக் கருத்துக்களை தி. மு. கழகம் வலியுறுத்தியும், காங்கிரசுக் கட்சி அவைகளை ஏற்றுச் செயல்படாததிலிருந்து—

மாநில அரசு பேரரசுக்குக் கட்டியம் கூறிடும் நிலையையும்,

தமிழகம் தொழில் வளம் பெறாத நிலையையும்,
சமதர்மம் கேலிக் கூத்தாக்கப்படுவதையும்,
முதலாளித்துவம் ஓங்கி வளருவதையும்

காங்கிரசுக் கட்சி ஒப்பி, திட்டமிட்டுச் செய்து வருகிறது என்பதும், அச்செயலால் காங்கிரசாட்சி நீடிக்குமானால்—

வட இந்தியா தொழில் கொழித்த பகுதி ஆகவும்,
திராவிடம் தேய்ந்த இடமாகவும்,
தொழில்கள் இலாப வேட்டைக்காடாகவும்,
தொழிலாளர் உழைத்து உருக்குலைவோராகவும்
விலைகள் விஷம்போல் ஏறவும்,
பொதுமக்கள் அகவிலையால் அல்லற்படவும்,
வேலையில்லாத் திண்டாட்டம் பெருகவும்,
வேதனை தற்கொலை அதிகமாகவும்,
இயற்கை வளங்கள் பாழ்படவும்,

இல்லாமை மக்களைத் தாக்கவும்,
தாய்மொழியின் எதிர்காலம் பாழ்படவும்,
இந்தி மொழி ஆதிக்கம் ஏற்படவும்,
மாநில அரசு தலையாட்டியாகவும்,
பேரரசு ஆட்டிப்படைக்கவும்,
உழவுத் தொழில் உருக்குலையவும்,
நெசவாளர் வாழ்க்கை நொந்து போகவும்,
வரிச்சுமை அதிகமாகவும்,
ஏழை எளியோரை வரி தாக்கவும்,
ஊழல்கள் பெருகவும்,
உலுத்தர்கள் கொழுக்கவும்,
சமதர்மம் பாழ்படவும்,
சுரண்டல்காரர் கரம் ஓங்கவும்,
மக்கள் உரிமைகள் அழிக்கப்படவும்,
அடக்கு முறைகள் தலைவிரித்தாடவும்

ஆனதோர், பயங்கரமான நிலைமை ஏற்பட்டு இந்நாட்டு நிலையும் மக்களின் வாழ்வும் சீர்குலைக்கப்பட்டு, ஏற்கனவே இன்னலுற்றுக் கிடக்கும் திராவிடர் என்றென்றும் தலைதூக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்று தி. மு. கழகம் அஞ்சுகிறது.

இத்தகைய கேடு சூழ் நிலைமை உருவெடுக்காமலிருக்கச் செய்யவும், உரிமையைக் காத்து, தொழில் வளத்தைப்பெருக்கிச் சமதர்மத்தை வெற்றிபெறச் செய்யவும் தி. மு. கழகம் ஆட்சிமன்றம் சென்று தூய தொண்டாற்றப், பொதுமக்களின்அனுமதியைக் கோருகிறது.

முதலாளிகளின் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் தேவையானவைகளை அவர்களுக்கு வாக்களித்தபடி செய்ய முடியவில்லையே—ஒவ்வொரு முயற்சியின்போதும் எதிர்ப்புக் காட்டி மக்கள் சார்பாக தி. மு. கழகம் போராடுகிறதே என்ற கசப்புணர்ச்சியும் கிலியும் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டுவிட்டதால், தி. மு. கழகத்தை, இலட்சாதிபதிகள், வகுப்புவாதிகள், சந்தர்ப்பவாதிகள், அரசியல் தரகர்கள் ஆகியோரின் துணைகொண்டு தேர்தலில் முறியடித்துவிட்டு, எதேச்சாதிகார ஆட்சி நடத்த வேண்டும் என்று காங்கிரசுக் கட்சி துடி துடிக்கிறது.

ஆண்டொன்றுக்கு மாநில அரசு 7 கோடி ரூபாய் வரி போட்டாக வேண்டும்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக! இதனை ஏழைகள்மீது போட எண்ணுகிறது காங்கிரசுக் கட்சி—அதற்காக ஆட்சியை மீண்டும் கைப்பற்றத் துடிக்கிறது! அதற்குச் செல்வவான்கள், தொழிலதிபர்கள், பெருந்தொகைகளைத் தேர்தல் நன்கொடையாகத் தந்து தூண்டிவிடுகிறார்கள்!

'இந்தி ஆதிக்கத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தள்ளிப் போடமுடியும்; எதிர்ப்புகள் இருப்பின் ஒழித்திடு'—என்று பேரரசு கட்டளையிடுகிறது. தி. மு. கழகம் ஆட்சிமன்றத்தில் வலிவுடன் உள்ளமட்டும் அதனைச் செய்யமுடியாது என்பதை மாநிலக் காங்கிரசு அரசு உணர்ந்து, தேர்தலில் தி. மு. கழகத்தை வீழ்த்த வேண்டும் என்று திட்டமிடுகிறது.

இப்போதே எப்பாடு பட்டாகிலும், எம்முறையைக் கையாண்டாகிலும் தி. மு. கழகத்தை வீழ்த்திவிடவேண்டும்—இல்லையேல் தி. மு. கழகம் ஆளும் கட்சியாவதைத் தடுத்திட முடியாது என்ற அச்சம் காங்கிரசுக் கட்சியைப் பிடித்தாட்டுகிறது.

அதனால், கொள்கை அறியாதவர்கள், சுரண்டல் பேர்வழிகள், காங்கிரசிடம் தொடர்பே அற்றவர்கள் ஆகியோர்களையெல்லாம் தன் முகாமுக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டு, தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று வேலை செய்கிறது!

# கழகம் மேற்கொள்ளவிருக்கும் சீரிய பணிகள்

எதேச்சாதிகாரப் போக்குடைய காங்கிரசுக் கட்சிக்கும், எளியோரைச் சுரண்டிக் கொழுக்கும் செல்வவான்களுக்கும் இடையே ஏற்பட்டுப்போயுள்ள 'ஒப்பந்தம்', நாட்டு மக்களை அடிமைகளாக்கும் அவதியை மூட்டிவிடும்; அந்த ஒப்பந்தம் உடைக்கப்பட்டாகவேண்டும்; அப்போதுதான், உழைப்போரின் வாழ்வு உயரும்—மக்களின் உரிமை நிலைக்கும். இதற்காகப் பணியாற்றும் உறுதி கூறி, இத்தகைய பணியாற்றும் தகுதியை, ஏற்கெனவே பணியாற்றித் தி. மு. கழகம் பெற்றிருக்கிறது என்பதை இதுவரை வற்புறுத்திய கோரிக்கைகளையும் திட்டங்களையும், தொடர்ந்து வற்புறுத்துவதுடன், புதிய பல திட்டங்களையும், முறைகளையும் செயல்படுத்தப் பொதுமக்களின் நல்லாதரவைக் கேட்கிறது.

### சமதர்மத் திட்டம்

ஜனநாயகம் தழைத்திட, சமதர்மம் வெற்றிபெற தி. மு. கழகம் பாடுபடும் என்று உறுதியளிக்கிறது.

இன்றைய அரசியல் அமைப்பு, திராவிடத்தை அடிமைப்படுத்தவே பயன்படுகிறது என்பதைப் பாரறியச் செய்யும் பணியில் தி. மு. கழகம் தொடர்ந்து ஈடுபடுவதுடன், இந்த அமைப்புக்குள்ளாகவே கூடச் செய்யக்கூடிய முற்போக்கான காரியங்களைச் செய்யத் தவறிய காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை முறியடித்து, சமதர்மத்தை நிலைநாட்டவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது.

தனியார்துறை, பொதுத்துறை எனும் இரண்டும் இருக்கும் சமதர்மத் தத்துவம் எப்படி இருப்பினும், எமது 'நடைமுறைச் சமதர்மம் அதுதான்' என்று காங்கிரசுக் கட்சி கூறிவருவதும், தொழில்துறை சம்பந்தமாக வெளியிட்டுள்ள கொள்கை அறிவிப்பும் (Industrial Policy Resolution — 1956) நாட்டைச் சமதர்மப் பாதைக்கு அழைத்துச் செல்லாது என்று தி.மு. கழகம் திடமாக நம்புவதால், தொழில்வளம் மூலம் செல்வப் பெருக்கத்தை ஏற்படுத்தி, அச்செல்வம் ஒரு சிலரிடம் குவிந்துவிடும் கேட்டினை நீக்கிட,

**உணவு—உடை—இருப்பிடம்—கல்வி—மருத்துவ நலம்—ஓய்வு ஆகிய அடிப்படைத் தேவைகள் எல்லா மக்களுக்கும் கிடைக்கத்தக்க வழிசெய்வதுடன், இவைகளுக்கான தொழில்களும் தனியாரின் இலாபவேட்டைக் காடாகிவிடும் நிலைமையை மாற்றியமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.**

நாட்டின் மொத்த வருமானம் அதிகரித்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் காட்டப்பட்டபோதிலும், தனிப்பட்ட முறையில் பார்த்தால் பொதுமக்களின் சராசரி வருமானம் குறைந்துவருவதுடன், காங்கிரசாட்சியில் பணக்காரர் மேலும் பணக்காரராகவும், ஏழை மேலும் ஏழை ஆகவுமான நிலைமை இருப்பதால், வருமானங்களில் உள்ள ஏற்றத்தாழ்வைக் குறைக்கத் தி. மு. கழகம் பாடுபடும்.

### வெளிநாட்டுக் கடன்கள், மூலதனங்கள்

கட்டுப்பாடற்ற முறையில் வெளிநாட்டுக் கடன்களும், மூலதனங்களும் வருவது நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதால், நிதி வசதிகளை அளவுடன்

பெற்று, தக்க பலன் தரக்கூடிய திட்டங்களில்அவற்றை ஈடுபடுத்தக் கழகம் வற்புறுத்தும்.

## வரிப்பளு

வருமானம் மிகுந்தவர்கள் மீதும், வரிகளைத் தாங்கக்கூடிய இடங்களிலும் போடக்கூடிய நேர்முக வரிகளின் விகிதம் குறைந்து, பொதுமக்கள்மீது விழுகிற மறைமுகமான வரிகளின் விகிதம் ஆண்டு தோறும் அதிகரித்து வருவதைக் கண்டித்து, ஏழை எளியவர்களின் மீதும் சிறு தொழில்கள் புரிவோர்மீதும் விழுந்திருக்கும் வரிப்பளுவைக் குறைக்க தி. மு. கழகம் முயலும்.

## தொழில்வளத் திட்டங்கள்

வடநாட்டில் பெருகிவரும் தொழில்களுக்குத் தென்னாடு ஒரு வாணிபச் சந்தையாக இருக்கும் நிலையை மாற்றி, தென்னாட்டுக் கனிவளங்களையும், இயற்கை வசதிகளையும் ஆராய்ந்து, தென்னாட்டைத் தொழில் மயமாக்கும் திட்டங்களைத் துவக்கக் கழகம் பாடுபடும்.

தமிழகத்தில் வசதியான ஏதேனும் ஒரு துறைமுகத்தைத் தேர்ந்தெடுத்து, அதனைச் சுங்கத் தீர்வையற்ற துறைமுகமாக்க ஏற்பாடு செய்யும்.

சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் ஆகியவை விரைவுபடுத்தப்பட்டு, அதற்குத் துணை செய்யத்தக்க வகையில் நெடுஞ்சாலைகள் அமைத்திட வழிகாணும்.

காவிரி வட்ட எண்ணெய்த் திட்டத்தைத் துரிதப்படுத்தி, அங்கு ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அமைக்க முற்படும்.

நெய்வேலி சுரங்கத் திட்டத்தை விரிவுபடுத்துவதுடன், அதனை மாநில அரசின் உடைமையாக்கிட ஏற்பாடு செய்யும்.

சேலம் இரும்புத் தொழிற்சாலையைத் துவக்கிடச் செயல்படும்.

அணு உலைக்கூடம் அமைக்கும் செயலில் ஈடுபடும்.

அண்டை மாநில ஆறுகளின் நீர் கிடைக்கும் திட்டத்தை மேற்கொள்ளும்.

சூரிய வெப்பத்தை விஞ்ஞான முறைப்படி, (இஸ்ரேலில் உள்ளபடி) தொழிலுக்குப் பயன்படுத்தும் திட்டம் தொடங்கும்.

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அண்மையில் அமெரிக்காவில் கண்டறியப்பட்ட விஞ்ஞான முறைப்படி மேற்கொள்ளும்.

கடலோர வாணிபத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் கால்வாயுடன் இணைத்து, படகுப் பாதையாக்கும்.

மீன் பிடிக்கும் தொழிலைப் புதுமுறைப்படி வளர்த்து, வருவாயைப் பெருக்கும்.

இறைச்சித் தொழிலை இலாபகரமானதாக்கும்.

எலும்பு உரத் தொழிற்சாலையும் இரசாயன உரத் தொழிற்சாலையும் அமைக்கும்.

கோழி வளர்ப்பு, தொழில் முறையினதாக்க வழிகோலும்.

தேங்காய் நார் மூலம் செயற்கை இரப்பர் தொழிலை மேற்கொள்ளும்.

முந்திரி ஆராய்ச்சி மேற்கொண்டு அதன் எண்ணெய், ஓடுஆகியவை தொழிற் பொருள்களாக்கப்படும்

பழத்தோட்டங்கள் ஏற்படுத்தி, வெளிநாடுகளுக்குப் பதப்படுத்தப்பட்ட பழங்களை ஏற்றுமதி செய்யும்.

கரும்புச்சக்கை கிடைக்குமிடத்திலும், மூங்கில் கிடைக்குமிடத்திலும் காகித ஆலைகளை ஏற்படுத்தும்.

தாவர எண்ணெய்த் தொழிற்சாலைகளை அமைத்திடும்.

மாக்னசைட், மாங்கனீஸ், ஜிப்சம், அலுமினியம், மைக்கா ஆகிய கனிப்பொருள்களைக்கொண்டு செய்பொருள்கள் தயாரிக்கும்.

மோட்டார் வண்டி கட்டும் தொழில் அமைப்புக்கள் ஏற்படுத்தும்.

மருந்துகள், இரசாயனப் பொருள்கள், சாயப் பவுடர்கள் தயாரிக்கும் தொழிலகங்களைத் துவக்கும்.

தோல் ஏற்றுமதியின் விகிதத்தை மாற்றி, செய்பொருள் அளவை அதிகப்படுத்தும்.

விவசாயம் நடத்தப்படுவதற்கு ஆகும் செலவினம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போவதைத் தடுத்து நிறுத்த வழிவகை காணும்.

உழவுத்துறையில் விஞ்ஞான முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் விவசாய அடிப்படையில் இருப்பதை மாற்றி, தொழில்வள அடிப்படைக்கு அதை முன்னேறச் செய்ய வழிகாணும்.

சென்னை மாநகரை 'ஏ' பிரிவு நகரமாக ஏற்றுக் கொள்ளச் செய்யும்.

திடீர் வானிலை மாற்றங்களாலும், இயற்கை உற்பாதங்களாலும் பயிர்த்தொழிலில் ஏற்படும் நஷ்டங்களைச் சமாளிக்க, அரசாங்கச் சார்பில் 'பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்சு' ஏற்படுத்த முற்படும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசாங்கச் சலுகைகளும், உதவிகளும், மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அளிக்கப்பட வழிசெய்யும்.

உணவுப்பண்டங்கள்மீது போடப்படும் விற்பனை வரியை ஒருமுனையினதாக்க ஆக்கவும் தி. மு. கழகம் வழிசெய்யும்.

குதிரைப் பந்தயம் நடத்தப்படுவதை நிறுத்திவிட வழிகாணும்.

பட்டாளத்தில் பணியாற்றிவிட்டு வந்திருக்கும் தோழர்களின் நல்வாழ்வுக்காகத் தொழில்வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தைச் செம்மைப் படுத்தும்.

உப்பளத்தருகே உப்புமூலம் தயாராகும் பொருள்களைச் செய்யும் தொழிற்சாலைகளை அமைக்கும்.

கனரகத் தொழில்களையும், மின்சாரக் கருவிகள் உற்பத்தி அமைப்புக்களையும் அமைக்க முற்படும்.

தொழில் அமையும் ஊர்களை இணைக்கும் இருப்புப் பாதைகளையும், நெடுஞ்சாலைகளையும் அமைத்திட வழி காணும்.

## பொதுத்துறை

ஏற்கனவே தனியார்துறையில் உள்ள பெருத்த வருவாய்தரும் தொழில்களை—நியாயமான நஷ்டஈடு, பத்திரங்கள்மூலம் தரப்பட்டு—பொதுத்துறைக்கு மாற்ற வழிகாண முனையும்.

பொருளாதார அமைப்பு பணக்கார ஆதிக்கத்தில் சிக்கிக்கொள்ள பாங்குகள் (Banks) பயன்பட்டு வருவ

தால் அவைகளைச் சர்க்கார் உடைமைகளாக்க வேண்டிய ஏற்பாட்டினைச் செய்யும்.

தனியார்துறையினை நடத்திவரும் தொழில்திபர்களில், தொழில் நுணுக்கம் அறிந்தவர்களைப் பொதுத் துறைத் தொழில்களை நடத்திச் செல்லப் பணித்திட ஏற்பாடுகள் செய்யும்.

போக்குவரத்துத் துறையில் பஸ் தொழிலை அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டத்தை விரைவுபடுத்திப் பஸ் மார்க்கங்களை அதிகப்படுத்துவதுடன், சிற்றூர்களை இணைக்கும் பஸ்களை நடுத்தர அளவினதாக்கிட ஏற்பாடு செய்யும்.

## தொழிலாளர் நலன்கள்

நாட்டிலுள்ள தொழில்களும் வேலைகளும் வரையறுக்கப்பட்டுத், தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பள விகிதங்களும், விடுமுறை, ஓய்வு, 'கிராடியூடி' போன்ற மற்ற சலுகைகளும் நிர்ணயிக்கப்பட்டு, அவற்றைத் திறம்பட அமுலாக்கவும் வழிமுறை காணும்.

## கைத்தறியாளர்

கைத்தறி நெசவாளர்களின் கஷ்டம் போக்க, கரைபோட்ட வேட்டியும், சேலையும் ஆலைகளில் தயாராவதையும், இறக்குமதியாவதையும் தடுக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கே அளித்திட முற்படும்.

கைத்தறித் துணிகளுக்கு வெளிநாட்டு மார்க்கெட் வசதி கிடைத்திட, வெளி நாடுகளுடன் செய்து கொள்ளும் வியாபார ஒப்பந்தங்களில் இடம் ஏற்படுத்த வழிகாணும்.

எல்லாத் தொழிலாளர்களுக்கும் நியாயமான ஊதியம் குறிக்கப்படும் சட்டத்தை விரிவுபடுத்திச் செயல்படுத்தும்.

## உழவுத் தொழில்

தரிசு நிலம் என்ற தலைப்புடன் உள்ள விளைநிலமாகக்கூடியவைகளை உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதித்திராவிடர்கட்கும், நிலமற்ற மற்றையோருக்கும் நஞ்சையாகக்கூடியதை 3 ஏகரும், புஞ்சையாகக் கூடியதை 5 ஏகரும் பகிர்ந்தளிக்கும் திட்டம் மேற்கொள்ளும்.

நில உச்சவரம்பு 15 ஏகர் என்ற திருத்தம்கொண்டு வந்தும், போலி விற்பனைகளும், ஏற்பாடுகளும் செல்லுபடியற்றனவாக்கியும், விதிவிலக்குகளை நீக்கியும், நில உச்சவரம்புச் சட்டத்தை உயிருள்ளதாக்கும்.

## கூட்டுறவுத்துறை

கூட்டுறவுத்துறை, அதிகாரிகளின் பிடியிலிருந்து விடுபடவும், ஒரு சிலருடைய ஏகபோக உரிமைகளமாகாதபடி தடுத்தும், தூய்மையும் பயனும் உடையதாக்க முற்படும்.

கூட்டுறவு அமைப்புக்களில் 100-க்கு 25-பங்கு ஆதித்திராவிட மக்களும், 25-பங்கு பின்தங்கிய வகுப்பினரும் உறுப்பினர்களாகப்படவேண்டும் என்ற நிபந்தனையைச் செயல்படுத்தும்.

## சிற்றூர்ப்புற நலன்கள்

சீரழிந்து கிடக்கும் சிற்றூர்ப்புறங்களுக்குப் பாதை வசதியைத் திட்டமிட்டு 10-ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்டாளத்தைப் பயன்படுத்தும்.

மேற்படி காரியத்துடன் கிராமக் கிணறுகள், ஏரி மராமத்து வேலைகள், சிறு தேக்கங்கள் அமைத்தல், வீடுகள் கட்டுதல் ஆகிய காரியங்களுக்காக மாவட்டந் தோறும் 'தொழிலாளர் அணி' (Land Army) அமைத்து உண்டி–உடை–உறையுள் தந்து, 10-ஆண்டுக் காலத்தில் அக்காரியங்களைச் செய்துவிடத் திட்டமிடும்.

ஒவ்வொரு சிறு வட்டத்துக்கும் குறைந்தது ஒரு மருத்துவ 'வான்' ஏற்பாடுசெய்து, கிராமப்புறங்களில் மருத்துவ வசதியைப் பெருக்க வழிகாணும்.

## பஞ்சாயத்து அமைப்பு

அரசாங்கத்திடம் குவிந்துகிடக்கும் பல அதிகாரங்களைப் பஞ்சாயத்து அமைப்புக்களுக்கு, உண்மையாகச் செயல்முறையில், பகிர்ந்தளிப்பதுடன், புதிய பொறுப்புக்களை ஏற்று நடத்தக்கூடிய அளவில், பஞ்சாயத்துக்களுக்குத் தரப்படும் அரசாங்க மானியம், வசூலிக்கப்படும் வரியின் அளவு (Matching grant) என்று இருப்பதை இருமடங்கு என்று ஆக்கும்-

## சென்னை மாநகர்

சென்னை மாநகர் வசதி பெற நிபுணர் வகுத்த திட்டங்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முற்படும்.

## நகராட்சிகள்

எல்லா நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

எல்லா நகராட்சிகளிலும், தீயணைப்பு நிலையங்கள் அமைய ஏற்பாடு செய்யும்.

## கல்வித்துறை

கட்டாய இலவசக் கல்வியை வெற்றிகரமாக்குவதுடன், ஆதாரக் கல்வி முறையின் பயனற்ற தன்மையைப் போக்கி, முற்போக்குக் கருத்தும் இக்காலத் தொழில் அறிவும் பெறத்தக்க முறைகளை மேற்கொள்ளும்.

கலைத்துறை மேம்பாடடைந்து சமுகத்துக்கு நற்கருத்தளிக்கும் சாதனமாகத் திகழத்தக்க முறைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்துக்கு மேலும் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்கத் திட்டமிடும்

விஞ்ஞான நுட்பமிக்க தொழில் அறிவு தரத்தக்க பேராசிரியர்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்தேனும் விரைவில் தொழில்நுட்ப அறிவு உயர வழிகோலும்.

திராவிட மொழி, கலை, நாகரிகம், இலக்கியம், வரலாறு, இசை, ஆகியவை குறித்து ஆராய்ச்சி நடத்தி, திராவிடத்தின் தொல்பெருமையையும், தனிச் சிறப்பையும் உலகுக்கு எடுத்துக்காட்டத் துணையாகும் வகையில், ஒரு திராவிட ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் உண்டாக்கமுற்படும்.

குறள்நெறி உலகில் பரவிட, பிரசார அமைப்பு ஏற்படுத்தும்.

## சிறுபான்மையினர்

சிறுபான்மையினராக உள்ள முசுலீம், கிருத்தவர் எனும் மக்களுடைய குறைகளை நீக்க, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து அவர்களது முன்னேற்றத்துக்கும் கழகம் பாடுபடும்.

## தாழ்த்தப்பட்டோர்நிலை

தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர், மலைவாழ் மக்கள் ஆகியோர்களுக்குத் தனிச்சலுகைகளும் வாய்ப்புக்களும் வழங்கி, மற்றவர்களுடன் ஒத்தநிலைக்கு அவர்களை முன்னேறச்செய்யக் கழகம் அயராதுபாடுபடும்.

சேரிச் சீர்திருத்தம் என்ற பெயரால் குடிசைகள் திடீரெனப் பிரிக்கப்படுவதும், குடிசைவாழ்வோர்,

ஊருக்கு வெகு தொலைவுக்கு விரட்டப்படுவதும் ஆகிய முறை தடுக்கப்பட்டு, ஊர்ப்பகுதியிலேயே, அவர்கள் தொழில் செய்யும் இடத்திற்கு அண்மையிலேயே குடியிருக்கச் செய்ய வழிகாணும்.

## தேர்தல்முறை

இந்த நாட்டுக்கு ஏற்ற விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைப் (Proportional Representation) படி தேர்தல் நடைபெறவும்—

ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் மக்களின் கருத்தை அறிய 'வாக்கெடுப்பு முறை' (Plebisite) ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தகைய வாக்கெடுப்பின்மூலம் கிடைக்கும் முடிவு அரசியல் சட்டப்படி செல்லுபடியாகக்கூடியதாக ஆக்கவும்—

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நெறி பிறழ்ந்து சென்றாலும், மக்களின் கருத்துக்கு மாறுபட்டு நின்றாலும், அத்தகைய பிரதிநிதிகளைத் திரும்ப வரவழைத்துக்கொள்ளும் வாய்ப்பை வாக்காளர்களுக்கு அளிக்கவும்—

கழகம் அரசியல் முறையில் சட்டப்படி வழிவகை காண முற்படும்,

## இந்தி ஆதிக்கம்

நேரடியாகவும் மறைமுகமாகவும் வரும் இந்தி ஆதிக்கத்தைத் தடுக்கவும், எவ்விதக் காலவரையறையுமின்றி 1965-க்குப் பிறகும் மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கச் செய்யவும் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்தக் கழகம் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

## சீர்திருத்தத் திருமணம்

சீர்திருத்தத் தமிழ்த் திருமணங்களையும் சட்டப்படி செல்லத்தக்கதாக்க முற்படும்.

## உரிமைப் பாதுகாப்பு

மக்களின் அடிப்படை உரிமைகளையும், எதிர்க் கட்சியினரின் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டப் பிரிவுகளையும் அரசாங்க உத்தரவுகளையும் மாற்றியமைக்க முற்படும்.

## முற்போக்கு ஆட்சி காண....

விரிவாகக் கூறுவதானால் — இவைகளையும், இவை போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம். இவை ஒரு முற்போக்கு ஆட்சியில் சாதிக்கமுடியாத காரியங்களல்ல!

போதுமான ஆதரவை மக்களிடமிருந்து பெற்று, திராவிட முன்னேற்றக் கழகம், மாநில அரசு மூலம் இவைகளைச் செயல்படுத்த முனையும் என்று உறுதி அளிக்கிறோம்.

இவைகளின் அளவு, எண்ணிக்கை ஆகியவற்றை விட, அடிப்படையில் காணக்கிடக்கும் நோக்கமே மிக முக்கியமானது.

- ○ விரைவில் தொழில் வளர்ச்சி—
- ○ திட்டமிட்ட தொழில் வளர்ச்சி—
- ○ முதலாளித்துவ ஆதிக்கத்தை வளர்க்காத தொழில் வளர்ச்சி —
- ○ நல்வாழ்வு தரவல்ல தொழில் வளர்ச்சி —

இந்த நோக்கங்களே மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை

வேலை வாய்ப்பினை நோக்கமாகக்கொண்ட பல்வேறு தொழில்களைப் பரவலாக அமைத்தாலும், வெளிநாடுகள் விரும்பிப் பெறத்தக்க பொருள்களைத் தயாரிக்கும் வருவாய் தரத்தக்க — தனி முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் அமைக்கப்படுவதுதான் சீரான பொருளாதார அமைப்பை ஏற்படுத்தித்தரும் என்று தி.மு.கழகம் வலியுறுத்துகிறது.

ஒவ்வொன்றிலும் சிறுசிறு அளவு என்ற பலவற்றை மேற்கொள்ளும் போக்கு ஏட்டுக்கு மட்டுமே ஏற்றது— நாட்டுப் பொருள் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்று தி. மு. கழகம் கருதுகிறது.

சமுக அமைப்பிலே நெடுங்காலமாக நெளிந்து கிடக்கும் கசப்புணர்ச்சி, வெறுப்புணர்ச்சி நீங்கக் கலப்பு மணம் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தி. மு. கழகம் வலியுறுத்துகிறது.

இத்தகைய முற்போக்கான திட்டங்களை மேற்கொள்ள விரும்பி, பொதுமக்களின் பேராதரவைக் கேட்கிறது.

திராவிட விடுதலைக்கான இயக்கமாகப் பணியாற்றி வரும் தி. மு. கழகம், ஆட்சிமன்றம் சென்று அரசியல் கட்சியாகத் திகழ்ந்து, ஜனநாயகக் கடமையினை மேற்கொள்ள விரும்புவது என்ன நோக்கங்களுக்காக என்பது, மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் என்று தி. மு. கழகம் எடுத்துக்காட்டியிருப்பதிலிருந்து விளக்கமாகிறது.

## 14 ஆண்டுக் காங்கிரசு ஆட்சி

14 ஆண்டுகளாக ஒரே கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

சமுகத்தில் எந்தப் பிரிவினரும், காங்கிரசு ஆட்சியில் தாம் எதிர்பார்த்த நன்மைகள் கிடைத்தனவென்று கூறித் திருப்திப்படவில்லை நிர்வாகத்தில் திறமைக் குறைவும், மந்தத் தன்மையும், ஊழலும் நெளிவதுடன், நிர்வாக இயந்திரம் காங்கிரசுக் கட்சி ஆதிக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது என்ற புகார் வலுத்துவருகிறது.

எனினும், பிரச்சாரயந்திர பலத்தாலும், செல்வவான்கள் கூட்டுறவு வலிவாலும் காங்கிரசுக் கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறது.

இதனால் ஜனநாயகப் போர்வையில் எதேச்சாதிகாரம் வளர வழி ஏற்பட்டுவிடுகிறது.

**அரசியல் எதேச்சாதிகாரமும் பொருளியல் முதலாளித்துவமும் ஒருநாட்டில் வலுப்பெற்றுவிடுமானால், பாசிச நோய் பீடித்துக்கொண்டது என்று கூறலாம்.**

## கழகத்தின் உறுதி

அத்தகைய ஆபத்தான கேட்டிலிருந்து நாட்டை மீட்டிட, இந்தப் பொதுத்தேர்தலில் மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி, ஜனநாயகத்தை நிலைநிறுத்த, முதலாளித்துவத்தை முறியடித்து சமதர்மத்தை வெற்றிபெறச் செய்ய, பாழ்படுத்தும் பழைமைப் பிடிப்புக்களை நீக்கிப் புதுமை உலகுகாண, பொதுமக்கள் சார்பில் பணியாற்ற தி. மு. கழகம் உறுதிகொண்டு பொதுத்தேர்தலில் ஈடுபட்டு, கஷ்ட நஷ்டமேற்று, பயிற்சியும் பக்குவமும் பெற்ற ஆற்றல் மிக்கவர்களை அபேட்சகர்களாக நிறுத்தி ஆதரவு கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

## கேடுகள் போக்கிட—
## நாடு வாழ்ந்திட—

தி. மு. கழகம் நல்ல தொண்டாற்ற விழைகிறது. 'ஆதரவு தாரீர்' என்று ஜனநாயகத்தில் நம்பிக்கையும் பற்றும் கொண்ட அனைவரையும் தி. மு. கழகம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

# சரியும் ஏகாதிபத்தியம்

லர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (24—12—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 18

விடுதலை பெற்றுத் தந்த வீரர்கள் என்று வீராப்புப் பேசிக்கொண்டு வரும் இன்றைய ஆட்சியாளர்கள், தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், கூலி உயர்வுக்காகவும் போராடுகிறார்கள் என்றால், சுட்டுத் தள்ளுவதற்குக் கொஞ்சமும் யோசிப்பதில்லை. தங்கள் தங்கள் மொழிக்கு ஆட்சி மன்றத்திலே முக்கியத்துவமும், முதலிடமும் தரவேண்டும் என்று உரிமைக் கிளர்ச்சி நடத்தும் இலட்சியவாதிகளைத் தடிகொண்டு தாக்குவதற்கும், பட்டாளத்தை ஏவி அவர் கம் துப்பாக்கியிலே குண்டுகள் உள்ளவரை சுட்டுப் பொசுக்குவதற்கும் சற்றும் பின் வாங்கியதில்லை. நாட்டுப் பிரிவினைக்காக நானா பக்கங்களிலும் கிளர்ச்சிகள் நடத்தும் விடுதலை வீரர்கள்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுக் காட்டாட்சி நடத்துவதற்கும் கிஞ்சிற்றும் காலந்தாழ்த்தியதில்லை.

இவையத்தனையும் தமிழகத்திலே, வங்கத்திலே, அசாமிலே. பஞ்சாபிலே கண்கூடாகப் பார்த்த நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்பதை எவரே மறுக்கவல்லர். இதில் வேடிக்கை என்னவென்றால், இவ்வளவு அடக்குமுறைகளும், கொடுமையும் அகிம்சையின் பேரால், காந்தியத்தின் பேரால், பஞ்சசீலக் கொள்கையின் பேரால் அன்றாடம் நடைபெற்று வரும் மிக மிகச் சாதாரண சம்பவமாகவே இன்று நிலவி வருகிறது. மக்கள் வேட்டுச் சத்தத்தைக் கேட்டார்களே ஒழிய, அவர்கள் வேதனை தீரும் வழி வகையைக் காணவில்லை.

விடுதலை பெற்றதாகச் சொல்லப்படும் இத் துணைக்கண்டத்தில் காவல் துறைக்கும், இராணுவத் துறைக்கும் மட்டும் செலவழிக்கப்படும் தொகை ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் உயர்ந்துகொண்டு போகிறதே ஒழிய, அந்நியர் ஆக்கிரமிப்பைத் தடுக்க முடிந்ததா என்றால்—இல்லை!

பஞ்சசீலத்தைப் பாருக்கெல்லாம் போதித்துவரும் பண்டிதரின் ஆட்சியிலேதான் செஞ்சீனா 12,000 சதுர மைல் பரப்பளவுள்ள நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. நாட்டு மக்களை நலிய வைத்துக் கோடிக்கணக்கான பணத்தை ஏப்பமிட்டுக்கொண்டிருக்கும் இராணுவம், அந்நியர் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்குரிய கையாலாகாதத் தன்மையில் ஊழலின் உறைவிடமாகத் திகழ்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் இரத்தத்தைக் குடிப்பதற்குத் துடி துடிக்கும் இராணுவம், பக்கத்திலே உள்ள சீனாவைத் தட்டிக் கேட்பதற்குத் தொடை நடுங்கிக்கொண்டிருக்கிறது.

அந்த நேரத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம், பிரிவினை கோரும் ஒரு விடுதலை இயக்கமாக இருந்தாலும், சீனா பொறுத்தவரையில் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பணியில் ஈடுபடவில்லை. மாறாக சீனா விஷயத்தில் இத் துணைக்கண்டம் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும், பாதுகாப்பாகப் பக்கத்திலே நின்று பணியாற்றும் என்று அறுதியிட்டு உறுதியளிக்கத் தவறவில்லை.

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கையாலாகாத் தன்மையை நன்கு புரிந்துகொண்ட போர்த்துகல், பிரான்சு ஆகிய ஏகாதிபத்திய வெறியர்கள் இன்னமும் இத் துணைக்கண்டத்தில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

நம் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி ஆகியவைகள் பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட எத்தனை முயற்சிகள் எடுக்கப்படவேண்டியிருக்கிறது! அதேபோன்று கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகள் போர்த்துகலின் ஆதிக்கத்தின் கீழ் இத் துணைக்கண்டத்தின் அவமானச் சின்னங்களாக இதுகாறும் காட்சியளித்துக்கொண்டிருந்தன.

இந்நிலையில்தான் இந்தியப் பேரரசு துணிந்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாகக் கோவாவைக் கைப்பற்ற முடிந்தது.

இராணுவ நடவடிக்கையின் முடிவை சற்றும் எதிர்பாராமலேயே, கோவையிலே கூடிய சிறப்பு மாநாட்டிலும் போர்த்துகல் ஆதிக்கத்தை ஒழிப்பதில் தி. மு. கழகம் இத் துணைக்கண்டத்தின் பக்கத்திலே துணை நிற்கும் என்று பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம் தனது அரசியல் நாகரிகத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

கோவா விடுதலை பெற்றது இத் துணைக்கண்டத்துக்கு ஒரு பெரும் வெற்றியாகும் என்பதனை இங்கு எடுத்துக்காட்டி, ஏகாதிபத்தியங்கள் இனியும் நிலைத்து நின்று ஆணவ ஆட்சி புரியமுடியாது — சாய்ந்து வீழ்ந்துபடும் என்பதனையும், தனியாக வாழும் வாய்ப்பினையும் உரிமையையும் கொண்ட எந்த நாட்டையும் அடக்கி ஆளலாம் என்று எண்ணி இறுமாந்து கிடப்பது இனி நடக்காதென்பதனையும் இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கடும் வெயில்! கடுமைமிகு குளிர்!—என்றுள்ள இப்புரத்து வாழ்க்கை போதும், தென்றல் விளையாடும் நாடு, திருவிட நாடு! அதில், திரும்பிப் பார்க்கும் இடந்தோறும் மணம் அளித்திடும் தேன் கூடு! புள்ளி மயில் நடமாடிப் பூவையரிடம் பாடம் கேட்டிடும் காட்சியுடன், புள்ளினம் இசை எழுப்பிப் பூங்காவில் வட்டமிடும் காட்சியுண்டு! கண்டால், கவி பிறக்கும், காவியம் உருவெடுக்கும்! காண வாரீர் தாயகம், கட்டுண்ட நிலை இல்லை! தன்மானம் தழைத்திடவே, நன்னுட்சி செழித்திடவே, தாயகம் தளைகளற்றுத் தகத்த காயம் காட்டுகின்றது! காண வந்திடுவீர், கஷ்டம் இனி இல்லை, இல்லை!!—என்று எழுச்சிப் பண்பாடி, உடன் பிறந்தார்களைத் தாயகம் அழைத்திடச் சென்றிருந்தால்,.........! எண்ணும் போதே தலை சுற்றுகிறது! நெஞ்சு விம்முகிறது.

ஆனல், நான் சென்றது அந்நிலையிலா? ஆளவந்தார்களாகிவிட்டவர்கள், தாயகத்தைத் தேம்ப வைத்துள்ள நிலையினையல்லவா, எடுத்துரைக்கச் சென்றிருந்தேன். நோய் தீர்க்கும் மருத்துவனுகவா சென்றேன்? இல்லையே! இல்லையே! நோயால் பீடிக்கப்பட்டுள்ள மக்களிடம் சென்று, இங்கு உள்ள நோயினைப்பற்றி அல்லவா பேசிவிட்டு வந்தேன்.

மதுங்கா, தாராவி, டோம்வில்லை, தாணு, செமூர், மான்காடு, எனும் பலப்பல பகுதிகளும், குஜராத் மாநிலத்திலுள்ள ஆமதாபாத்திலும், சென்றிருந்தபோது, திருவிடத்தின் நிலையால், நிலைகுலைந்து வாழ்வு அழிக்கப்பட்டு, வறுமையால் கொட்டப்பட்டுத், தீப்பிடித்த இடத்திலிருந்து, கருகிய நிலையில், வேறிடம் பறந்துசெல்லும் பறவைகள் போல, வடபுலம் வந்து கூடியுள்ள மக்களைக் கண்டேன்—துக்கமும் வெட்கமும் என்னைப் பிய்த்துத் தின்றது. எந்த வடபுலத்திலிருந்து, பாங்கர்களும் மண்டிக்கடை நடாத்துவோரும், பவுன்வெள்ளி அங்காடி வைத்திருப்போரும், பல பொருள்களை விற்று இலாபம் ஈட்டும் பெரும் பெரும் வணிகர்களும், திருவிடம் வந்து கொலு வீற்றிருக்கின்றனரோ, அங்கு அல்லவா, ஆண்ட பரம்பரையினர், அடிமைகளாக, அலுப்பினைக் கவனியாமல் உழைப்போராக, ஆயிரமாயிரம் சென்றுள்ளனர். அந்தேரி பகுதியில், நம்மவர்கள் இருந்திடும் நிலை கண்டோர், திராவிடநாடு திராவிடருக்கு என்பதனை வெறும் அரசியல் இலட்சியமாக அல்ல, வாழ்வின் திறவுகோலாகவே மதிப்பர், போற்றுவர்.

தம்பி! இங்கு, ஒரு அரசியல் கட்சி, ஏதோ ஓர் ஆகாத திட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுகிறது என்று, தம்மை மாமேதைகள் என்றெண்ணி மனப்பால் குடிக்கும் சில மமதையாளர் எண்ணிக்கொண்டுள்ளனர். வடபுலம் சென்று, இரக்கம் நிரம்பிய மனதினராய், தமிழர் அங்கு இருக்கும் நிலையினை அறிந்தால், திராவிடநாடு திராவிடர்க்கு எனும் இலட்சியம் வெற்றிபெற, தி. மு. கழகம் விரைவிலே வலிவு பெற்ருகவேண்டும் என்ற பேருண்மையை, சோரம்போய் விட்டவர்களும் பேரம்பேசி அரசியல் நடத்துவோரும் தவிர, மற்றவர் அனைவரும் உணர்வர்; ஒப்புக்கொள்வர்; எங்கெங்கும் எடுத்துரைப்பர்.

ஆமாம், தம்பி! பல்லைக் கடித்துக்கொண்டு, எல்லா இன்னல்களையும் பொறுத்துக்கொண்டிருக்கிரும், ஒரே ஒரு நம்பிக்கையுடன் — எம்மை எதையும் தாங்கிக் கொள்ளச் செய்வது அந்த நம்பிக்கைதான்! துர்நாற்ற மடிக்கும் இடத்தில், நடைபாதையில், மூட்டை சுமப்போராய், வண்டி இழுப்போராய், நரம்பு முறிய எலும்பு நொருங்க, இரத்தம் சுண்ட, உடல் தேயப் பாடுபடும் போது, எமக்கு உயிரூட்டம் தரும்விதமாக உள்ளது அந்த நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை என்ன? எப்படியும் தாயகம் தலைநிமிர்ந்து நிற்கும்! எப்படியும், தாயகம் தழைக்கும்! எப்படியும் கழகம் அந்தச் செயலில் வெற்றிபெறும.

கவனிப்பாரற்றுக் கிடந்தநிலை போயேவிட்டது; கழகம் என்ற சொல் கேட்டவுடன் ஆதிக்கக்காரர் முகம் கடுகடுப்பாகிறது. கழகம், ஒரு பெரிய கேள்விக்குறியாகிவிட்டது! அதன் பேருருவம் காணுதார் இல்லை; அதன் முழக்கம் கேட்டிடாதார் எவரும் இல்லை; அதன் வளர்ச்சியைத் தடுக்க முயன்று தோற்றேரின் தொகையே அதிகம்; அந்தத்தொகை வளர்ந்துகொண்டும் வருகிறது. வெற்றி, உறுதியாக! வெற்றி நமக்காக! வெற்றி, வேதனை போக்க! வெற்றி புதுவாழ்வு காண!!—என்றெல்லாம், தம்பி! அங்கு உள்ளவர்கள், எண்ணிக் கொண்டுள்ளனர்.

அந்த நம்பிக்கையின் நடமாடும் பிரதிநிதி நான், என்பதால்தான், அவர்கள் என்னைக் கண்டவுடன், கனிவுடன் 'அண்ணு' என்றழைத்தனர்; கரங்களை எடுத்துத் தம் கண்களில் ஒத்திக்கொண்டனர்; தம்பி! என்னென்பேன், அந்தக் கண்களில் முத்து முத்தாகக் கண்ணீர்!!

தேர்தலுக்கு எம்மாலான நிதி தருவோம், பெற்றிடுக, என்றனர்.

தேர்தலை, தம்பி! அவர்கள் ஒரு கட்சிக்காரியமாக, நிச்சயமாக எண்ணி, நிதி திரட்டவில்லை.

ஒரு கட்சி, பதவி பிடித்திட, தேர்தலிலே ஈடுபடுகிறது என்ற அந்த முறையிலே அவர்கள் எண்ணவில்லை.

நாம் கூடச் சில நேரங்களில், கட்சிக் கண்ணேட்டத்துடன், இந்தத்தேர்தலைக் கவனிக்கிறேம்—வடபுலம்

சென்று வாடிக்கிடக்கும் இலட்சக்கணக்கான நம்மவர்களுக்கு, இந்தத் தேர்தல், அரசியல் காரியமாகப் படவில்லை; தமக்கு வாழ்வளிக்க இங்கு எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியிலே மிக முக்கியமான கட்டம் என்றுதான் எண்ணுகிருர்கள்.

அந்த முயற்சியின் வெற்றியிலேதான், தமது எதிர்கால நல்வாழ்வே பிணைக்கப்பட்டிருக்கிறது, என்பதை அவர்கள் உணருகிருர்கள்.

அந்த உணர்ச்சி காரணமாகத்தான், என்னைக் கண்டதும், களிப்பால் மட்டுமல்ல, உள்ளுணர்ச்சியால், அவர்கள் கண்ணீர் வடித்தனர்.

தேர்தலிலே, அண்ணு! எப்படியும், தி. மு. கழகம் மகத்தான வெற்றி பெற்ருகவேண்டும், என்று அவர்கள் கூறியது, தம்பி! எப்பாடு பட்டாகிலும், எம்மைக் காத்திட வழி தேடுங்கள்! இன்னும் அதிக நாட்கள் நாங்கள் நலிந்து கிடக்க முடியாது! நட்டாற்றில் விட்டு விடப்பட்டவர்கள் போலாகிவிட்டோம். நாதியற்றவர்கள்—நாடற்றவர்கள்—என்று எம்மைக் கேலி செய்யும் குரல் எமது செவி வழி நுழைந்து நெஞ்சினைத் துளைக்கிறது. சொந்த நாடு சென்றிட வேண்டும்; சோற்றுக்கு வழியற்று இங்கு வந்து தஞ்சம் புகுந்தவர்கள் என்ற இழிமொழி எம்மைச் செந்தேளாய்க் கொட்டுகிறது. விரைவிலே எமக்கு வாழ்வு அளித்தாக வேண்டும்!!—என்று அவர்கள் கேட்கிருர்கள். கண்ணீரால் நனைக்கப்பட்ட பணத்தை என் கரம் தந்து அவர்கள் இதனைக் கூறினர், தம்பி! நானும் உன் உழைப்பின் மேன்மையிலே, உணர்ச்சியின் மாண்பிலே, அறிவாற்றலிலே நம்பிக்கை வைத்து, நிச்சயமாக இந்தத் தேர்தலில், தி. மு. க. மகத்தான வெற்றி பெறும் என்று வாக்களித்துவிட்டு வந்திருக்கிறேன். வருகிற வழி நெடுக, மனதிலே திகிலும் ஐயப்பாடும் குடைந்தது! உண்மையை மறைப்பானேன், கோவை சிறப்பு மாநாட்டிலே நான் கண்ட கோலாகலக் காட்சியும் கேட்ட வீரமிக்க உரைகளும், கரை புரண்டோடிய உணர்ச்சிப் பெருக்கமும்தான், என் திகிலையும் ஐயப்பாட்டினையும் அகற்றி, வடபுலம் வாடிக் கிடக்கும் நம் உடன் பிறந்தார்களிடம் நான் அளித்துவிட்டு வந்துள்ள வாக்குறுதி—தேர்தலில் தி. மு. க. மகத்தான வெற்றி பெறும்—என்ற வாக்குறுதி, நிச்சயம் நிறைவேறும் என்ற உறுதி ஏற்பட்டது.

அந்த உறுதியுடன் தம்பி! இதோ, தஞ்சை கிளம்புகிறேன்—மணி 5—மாலை அல்ல, விடியற்காலை!

வேலைகள் செம்மையாக நடந்தபடி இருக்கின்றனவா, தம்பி! வெறும் தேர்தல் அல்ல—பதவிபிடி சண்டை அல்ல—வாழ்ந்த இனம் வீழ்ந்து கிடக்கிறது, அதனை மீண்டும் எழச்செய்யும் முயற்சி!! வாளும் வேலும் கொண்டு நடாத்தப்படும் விடுதலைப் போரினை, இந்த ஜனநாயக நாட்களில், அறிவு, தெளிவு, உறுதி, உழைப்பு, எனும் கருவிகள் கொண்டு, நாம் நடத்திக் கொண்டிருக்கிருேம் என்பதை மறவாதே!

## ஆதிக்கத்தின்மீது பாயும் கண்கள்!

## இரக்கம் துளியும் எழாத மனம்!

## இரத்தக்கரை படிந்த கரம்!

## இல்லாதவனை எட்டி உதைக்கும் கால்!

### காங்கிரஸ் கட்சி இது!!

### காப்பாற்றுமோ ஏழை எளியோரை.

தம்பி! இதனை நீ அறிந்திருக்கிருய்; மற்றவர்களும் இதனை உன்னைப்போல உணர்ந்துவிடுவார்களானுல், தேர்தலிலே வெற்றி நிச்சயம் என்பதை விளக்கிடவா வேண்டும். மற்றவர்கள் இதனை அறிந்திடச் செய்திட, விரைந்து பணியாற்று, விறுவிறுப்புடன் பணியாற்று; வெற்றி நமதே! அஞ்சற்க!!

மூன்று பெரிய

## ஆபத்து

### முன்கூட்டியே சொல்லிவிட்டோம்

ஆண்டொன்றுக்கு

ஏழை தலையில் விழப்போகுது

(1) ஏழு கோடி ரூபாய் புது வரிகள்.

(2) அரிசிச்சாதம் கூடாதென்று அதிகாரத்தின் துணைகொண்டு கோதுமை திணிக்கப்போகிருர்கள்.

(3) தமிழை அழிக்க இந்தி தமிழ் எழுத்தை அழிக்க தேவநாகரி புகுத்திப் பாழ்செய்யத் துடிக்கிருர்கள்.

மூன்று பெரிய ஆபத்து

முன்கூட்டியே சொல்லிவிட்டோம்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 / இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

ஆபத்துகளைத் தடுத்திட

ஆற்றலுள்ளது

# தி. மு. க.

ஓ ட் டு க ள்

# உதயசூரியனுக்கே!

என

## நாட்டினர் அறிவித்துவிட்டால்

**ஆபத்து இல்லை நாட்டுக்கு!**

**அறிவீர்! அறிவீர்! தோழர்களே!!**

வீடுதோறும், இதனை எடுத்து விளக்கிடவேண்டும். வருவது தெரியாமலுள்ளோர் பலர் உளர்; நாம் அறிந்திருப்பதை அவர்களுக்கு எடுத்துக்கூறுவது அரசியல் கடமை; மக்களாட்சியில் ஒவ்வொருவரும் செய்து தீர வேண்டிய பொறுப்புமிகு பணியாகும்.

எத்தனை பெரிய ஆபத்துகள், மக்களைத்தாக்க இருக்கின்றன என்பதை நாம் மட்டும் அறிந்தால் போதாது—நாடு அறியவேண்டும்—அதற்கு, உன் நல்லறிவுப் பிரசாரம் நாளும் தேவை.

வேலை அதிகம், தம்பி! நாட்கள் மிகமிகக் குறைவு!! ஆகவே வண்டுபோல் சுற்றிடவேண்டும்; நானுே, என் உடல் வலிவுக்கு ஏற்ற அளவினைவிட மிக அதிகமாகப் பணியாற்றி வருகிறேன் என்பதை நன்கு அறிந்துதான் இருக்கிறுய்.

இரவு 11 மணி வரையில் கூட்டம்—பிறகு, திருக்கோவிலூர், வாணியம்பாடி, திருவண்ணுமலை, செங்கற்பட்டு, மதுராந்தகம், ஆகிய தொகுதிகளின் நிலைமைகள் குறித்த உரையாடல் — மூன்று மணிக்குத்தான் எழுத வாய்ப்பு—இதோ அ. க. தங்கவேலர் அனுப்பிய மோடார் அழைக்கிறது, தஞ்சைக்குச் செல்கிறேன்.

எல்லா ஊர்களுக்கும் ஒவ்வொரு இல்லத்துக்கும் நானே சென்று எல்லாவற்றையும் கூறிட இயலாதே—விருப்பம் உண்டு—நேரம் இல்லை! மேலும் நீயிருக்கப் பயம் ஏன் என்ற துணிவும் உண்டு. எனவே, தம்பி!

## மூன்று பக்கம் கடல் இங்கே!

## கப்பற்படை தலைமை வடக்கே!

**நியாயமா?**

நியாயம் அல்ல என்கிறது **தி.மு.க.**

நாட்டினரே

நல்லதீர்ப்பு

அளியுங்கள்!

**உதயசூரியன்**

வெற்றி பெற்ருல்

புதிய வாழ்வு பெற்றிடலாம்!

புதுப்புதுத் தொழிலும் கண்டிடலாம்!

## கப்பற்படையின் இருப்பிடமாய்

## காட்சி தரும் இத்திருவிடமும்!

உலகம் மெச்ச

நாம் வாழ

# உதயசூரியன்

ஆதரிப்பீர்.

என்பதனை நாடெங்கும் எடுத்துக்கூறி, நாம், வாழ வழி அமைப்போம், நாடு செழித்திட நல்லாட்சி காண்போம் என்று நம்பிக்கொண்டு, நம்மைக் கண்டதும் நெஞ்சு நெக்குருக நிற்கும் வடபுலம் சென்று வாடிக் கிடக்கும் நம்மவர்கள் மனம் மகிழத்தக்கவிதத்தில், எமது இனம் வீழ்ந்துபட்டுப் போய்விடவில்லை, மரபு அழிந்துவிடவில்லை, மாண்பு கெட்டுவிடவில்லை, இதோ வெற்றி, இதோ திருவிடம், இதோ நல்லாட்சி! என்று அவர்கள் களிப்புடன் முழக்கமிடத்தக்க வெற்றிகளைத், தேர்தல் களத்திலே பெற்றளிக்க உன் முழு ஆற்றலைத் தந்தாகவேண்டும்.

வேலை அதிகம்! நாட்கள் குறைவு! மறவாதே!!

அண்ணன்,

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.